விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 பங்குனி 21 ஜ. ஆகிர் 8 இதழ் 50
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 3-4-82

அபிவிருத்திசபைகளுக்கு கூடுதல் அதிகாரம்:

## அரசு-கூட்டணி சந்திப்பில்

### அறிக்கை சமர்ப்பிக்கப்படும்

[கொழும்பு]

மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்கு கூடுதலான அதிகாரங்கள் வழங்குவது பற்றி ஆராய நியமிக்கப்பட்ட குழு நேற்று முன்தினம் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவைசந்தித்து கலந்துரையாடியது.

மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்கு இவ்வாண்டில் ஒதுக்கப்பட்ட நிதிபற்றியும்' எவ்வாறு அதனைச் செலவிடுவது பற்றியும் இச் சந்திப்பின் போது ஆராயப்பட்டது.

அடுத்தஆண்டு மாவட்ட சபைகளுக்கு ஒதுக்கப்படவுள்ள நிதிகள் குறித்தும் ஆராயப்பட்டது. இவ் விஷயங்கள் குறித்து எதிர்வரும் திங்கட்கிழமை இடம்பெறவுள்ள அரசு—கூட்டணி சந்திப்பின் போது அறிக்கையொன்றை ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவிடம் சமர்ப்பிப்பதென்றும் இச் சந்திப்பின் போது தீர்மானிக்கப்பட்டது.

மாவட்ட அபிவிருத்திசபைகளுக்கு கூடுதலான அதிகாரங்கள் வழங்குவது பற்றி ஆராய நியமிக்கப்பட்ட குழுவில் யாழ்ப்பாண அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. எஸ். நடராசா, காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திசநாயக்க, வர்த்தக, கப்பல் துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி. கல்வி, இளை

(8ம் பக்கம் பார்க்க)

# இந்துமகாநாடு பிரதிநிதிகள்

# யாழ். வருவதில் ஆர்வம்!

### 24 குடிசைகள் தீக்கிரை

சென்னை, ஏப். 2

தமிழ்நாட்டில் திருத்தணி அருகே 24 குடிசைகள் தீக்கிரையானது. இதற்கான காரணம் பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (வெ)

## பல்கலைக் கழகத்தில் தங்கும் வசதிகள்

### பொதுவரவேற்பு: மாநகரசபை ஆலோசனை

(நமது சிறப்பு நிருபர்)

**இம்மாதம் இருபத்தொராம் திகதி முதல் இருபத்து ஐந்தாம் திகதி வரை நடைபெறும் அகில உலக இந்து மாநாட்டில் கலந்து கொள்பவர்களில் அதிகமான பிரதிநிதிகள், யாழ்ப்பாணம்வருவதில் மிகுந்த ஆர்வம் காட்டியுள்ளனர். சிலர் தமது விருப்பத்தை நேரடியாகக் கடித மூலமும் தெரிவித்துள்ளனர்.**

இந்து மகாநாட்டில கலந்து கொள்ளும் பிரதிநிதிகள் பற்றிய பெயர்ப்பட்டியல் விபரம் உத்தியோக பூர்வமாக அடுத்த வாரம் தான் வெளியிடப்படும் என்றுலும், மாநாட்டில் கலந்து கொள்ள ஏற்கனவே அழைப்பு கிடைத்த சிலர் தங்களது விருப்பத்தைக் கடிதம் மூலம் நண்பர்களுக்கு தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே யாழ்ப்பாணம் வரும் உலக இந்து மாநாட்டுப்பிரதிநிதிகளுக்கு சிறப்பான முறையில் வரவேற்பு அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

யாழ். மாவட்ட சபைத்தலைவர் திரு. சு. நடராசா தலைமையில் வரவேற்புக் குழுவும், சிவநெறிப்புரவலர் திரு. க. கனகராசா தலைமையில் நிதிக்குழுவும், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில் கலாசாரக் குழுவும் ஏற்கனவே நியமிக்கப்பட்டு இக் குழுக்களின் செயலாளராக யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. எம். சுப்பிரமணியம் செயல்பட்டு வருகிறார்.

இம்மாதம் இருபத்துஆறும் திகதி இரவு யாழ்ப்பாணம் வந்துசேரும்பிரதிநிதிகள் யாழ் பல்கலைக்கழகத்தில் தங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டன.

முல்லைத்தீவுக்கும், மன்னருக்கும் இக்குழுவினர் விஜயம் செய்ய ஒழுங்குகள் செய்யப்பட்டபோதிலும், தங்குவதற்கு வசதிகள் கிடைக்காதகாரணத்தினுல் இவர்கள் மேற்படி இரண்டு இடங்களிலும் தங்கமாட்டார்கள்.

(8 பக்கம் பார்க்க)

## காட்டில் காணப்பட்ட ரூ.40,500பெறுமதிபீடி இலை!

[யாழ்ப்பாணம்]

காட்டில் அநாதரவாகக் கிடந்த 40,500 ரூபா பெறுமதியான பீடிஇலை மூடைகளை பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

பூநகரிக் கடற்கரையிலிருந்து மூன்று மைலுக்குட்பட்ட காட்டுப்பகுதியில் பீடிஇலை மூடைகள் கிடப்பதாகக் கிடைத்த இரகசியத் தகவலொன்றின் பேரில் யாழ். பொலிஸ் விசேஷ புலனுய்வுத்துறை இன்ஸ்பெக்டர் கிருஷ்ணதாசன் தலைமையில் சென்ற பொலிஸ்கோஷ்டியினர் இவற்றைக் கண்டெடுத்து. யாழ். சுங்க இலாகாவிடம் ஒப்படைத்துள்ளனர். விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. [மா]

## கோஷ்டிச்சண்டை ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

கோஷ்டிச் சண்டையைப் பார்க்கச் சென்ற ஒருவர் படுகாயங்களுக்குள்ளாகி மரணமானுர்.

அரியாலை பூம்புகாரைச் சேர்ந்த சவரிமுத்து மோசஸ் (வயது 36) என்பவரே பலியானவராவர்.

அரியாலை பூம்புகார் என்ற இடத்தில் தலைதூக்கிய கலவரத்தின்போதுஎழுந்தசத்தம் கேட்டு, சென்ற இருவருக்கும் அடி, வெட்டுக் காயங்கள் ஏற்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்ததாகவும், நேற்றுமுன்தினம்இறந்துவிட்டதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ். சட்ட வைத்திய அதிகாரி எஸ். சரவணபவானந்தன் பிரேத பரிசோதனை நடத்திஞர்.

மரணவிசாரணை நடத்திய பதில் நீதவான் எஸ். அமிர்தலிங்கம் கொலை எனத் தீர்ப்பளித்துஎதிரிகளைக் கைதுசெய்யுமாறு பொலிஸாரைப் பணித்துள்ளார். (மா)

## 'ஐ.தே.க. ஸ்ரீலங்காகட்சிகளை அரசியலிலிருந்து வெளியேற்றவேண்டும்''

### றேகணவிஜயவீர கூறுகிறுர்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளாகும். இவ்விரண்டு கட்சிகளும் அரசியலிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும். அந்த நாள் இந்தநாட்டில் வெகுதூரத்திலில்லை''

மேற்கண்டவாறு ஜனதா விமுக்தி பெரமுனவின் தலைவர் திரு. றேகண விஜயவீரா கிருண்ட்பாஸ் பலாமரத்தடிச் சந்தியில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையில் கூறினுர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் ''கல்வி வெள்ளை அறிக்கை வறியமக்களின் கல்வியில் மண் அள்ளி போட்டுள்ளது. நாம் ஆட்சிக்கு வந்தால் அதனைத் தூக்கிஎறிவோம். இந்தநாட்டின் செல்வம் 3224 குடும்பங்களிடமே முடங்கியுள்ளது. நாம் ஆட்சிக்கு வந்தால் இவர்களின் குட்டு அம்பலத்திற்கு வரும். இவர்களில் அதிகமானேருக்கு சுவிஸ் வங்கியில் பணமுள்ளது. எனருர். [இ—வெ]

## 'ஈ.என்.ரி' சிகிச்சை நிலையம் தற்காலிகமாக இயங்குகிறது

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் திடீர்என்று மூடப்பட்ட யாழ் ஆஸ்பத்திரி காது, மூக்கு, தொண்டை (ஈஎன்ரி) சிகிச்சை நிலையம்; தற்காலிக ஒழுங்குகளுடன் மீண்டும் இயங்கத்தொடங்கியுள்ளது.

யாழ். ஆஸ்பத்திரியில் முன்னர் இருந்த இடத்தில் இயங்கும் இச்சிகிச்சைப்பிரிவு இப்பொழுது வாரத்தில் புதன் கிழமை, சனிக்கிழமை ஆகிய இரண்டு நாட்களில் மட்டுமே திறந்திருக்கும்.

### முகவரி மாற்றம்

"திஸா ரொய்ஸ்'' யாழ்ப்பாணம்

மேற்காணும் எமது ஸ்தாபனம் 70, மானிப்பாய் வீதியிலிருந்து புதிய முகவரியான 5/1, அபூபக்கர்வீதி, யாழ்ப்பாணம் என்னுமிடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதனை வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள், அன்பர்கள் யாவருக்கும் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்ளுகிறேம்.

இங்ஙனம்

"திஸா ரொய்ஸ்''ஸ்தாபனம்

தொலைபேசி இலக்கம்: 648. 2735

## இளைஞரின் சடலம் அடையாளம் காணுமல் அரசசெலவில் அடக்கம்

(புலோலி)

'சுமார் பதினெட்டு வயதுள்ள இளைஞர் ஒருவரின் சடலம், பருத்தித்துறை வராத்துப்பளையில் உள்ள பனங்காணிப் பற்றைக்குள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

அடையாளம் காணப்படாத இந்த இளைஞர், காக்கிநிற அரைக்கால்சட்டை அணிந்திருந்தார்.

இதுபற்றிக் கூறப்படுவதாவது: வராத்துபளையில் உள்ள பனங்காணி பற்றைக்குள் இனம் தெரியாத இளைஞர் ஒருவரின் சடலமொன்று கிடப்பதாக வராத்துப்பளையைச் சேர்ந்த ஆர். எஸ். சுப்பிரமணியம் பருத்தித்துறைப் பொலிசாருக்கு தகவல் கொடுத்திருந்ததைத் தொடர்ந்து பருத்தித்துறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஹேரத்தனபால தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினர் பிரேதத்தைப் பொறுப்பேற்று மந்திகை அரசினர் வைத்தியசாலை பிரேத அறையில் வைத்தனர். இவர்

(8-ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

துன்பம் தன்னைத்தானே பார்த்துக்கொள்ளும் வல்லமையுடையது; ஆனால் இன்பத்துக்கும் மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ள ஆள்தேவை.

— மார்க்டுவைன்.

# நமது நோக்கு

## சிவனொளிபாதமலையில் "யாழ்ப்பாணப் புலிகள்"

துவேஷம் கொண்ட உள்ளத்துக்கு அமைதி என்பது கிடையாது.

துவேஷத்தால் தூண்டப்பட்டு அக்கிரமங்களில் ஈடுபடுபவரை நாம் (காடையர்) என்று சொல்லித் தட்டிக்கழிப்பது எவ்விதத்திலும் நியாயமாகாது.

சிவனொளிபாதமலைக்கு விஜயம் மேற்கொண்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களும் விரிவுரையாளர்களும் தடுத்து நிறுத்தப்பட்டதுடன் தாக்கப்பட்டு உயிருடன் தப்பி வந்தது பெரும் ஆறுதலளிக்கும் செய்தியென்றே கொள்ளவேண்டும்.

சென்ற வருடம் நிகழ்ந்த யாழ்ப்பாணப் படையெடுப்பின் பரபரப்பு அவ்வளவு விரைவில் நூர்ந்துபோனதென்று நினைக்க என்ன நியாயம் உண்டு?

எனவே யாழ்ப்பாணத்திலிருந்து யாத்திரை என்ற வேடத்தில் 'புலிகள்' இலங்கையின் முதன்மையான புனிதஸ்தலத்தில் நடமாடுவதை பார்த்துக்கொண்டிருப்பார்களா? இவர்கள் காடையர்கள் தானா?

திருத்தப்பட்ட பயங்கரவாதச்சட்டம் அமுலில் வந்திருப்பதை நாம கவனத்திற்கொண்டால் இச்சம்பவம் சுமுகமாக முடிந்துவிட்டதென்றே கொள்ளவேண்டும்.

யாழ்ப்பாணத்திலோ நாட்டின் வேறெந்தப் பாகத்திலோ எவரையோ, எந்தக் கூட்டத்தினரையோ 'புலிகள்', 'பயங்கரவாதிகள்' என்று சந்தேகித்தால் அவர்களைக் கைதுசெய்து தடுப்புக்காவலில் வைத்திருக்கும் உரிமை, நீதிமன்றத்திலிருந்து நீதிஅமைச்சுக்கு மாற்றப்பட்டிருக்கிறது; இந்தநிலைமையில் என்னவும் நடக்கலாம்.

இந்த அபாயமான பின்னணியில் இன்று யாழ்ப்பாண மக்கள் 'புலிகள்' என்ற சந்தேகத்திலிருந்து தப்பிக்கொள்ள மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நாட்டில் நடைபெறுவதென்னவென்று தெரியாமல் அஜாக்கிரதையாகவிருந்தால் ஒரு சிம்மத்தை (புலியை விடுங்கள்)க் கூட ஒரு செந்நாய் கொன்றுவிடுமல்லவா?

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் எவ்விதத்திலும் புலிகளோ அல்லது பசுத்தோல் போர்த்த புலிகளோ அல்லரென்பதை அறிந்துகொள்வது கடினமல்ல. ஆனால் அது எம்முடைய கருத்து.

தங்கள் பிரதேசத்திலே பாதுகாப்பற்று வாழும் தமிழர் எங்கள் புனிதஸ்தலத்துக்கு என்ன துணிவுடன் வரமுடியும்?'' என்ற துவேஷம் இன்னும் இருக்கத்தான் செய்கின்றது.

இங்கு விட்டு விட்டுத் துமிக்கும் மழைபோலப் பயங்கரவாதம் தலைகாட்டுவது அங்கு ஊறிவரும் துவேஷத்துக்கு தூபமிடுகிறதை நாம் ஒப்புக் கொள்ளவேண்டும்.

நாட்டின் பல்கலைக்கழகம் ஒன்றின் செல்வாக்கு, பாதுகாப்பளிக்கும் பொறுப்புடைய பொலிஸாருக்கே போதுமானதாகக் காணப்படவில்லையானால் இன்னும் அதிக அனர்த்தங்கள் நடந்திருக்கலாமல்லவா?

இச்சம்பவத்தில் நோர்வூட் பொலிஸ் அதிகாரி இந்த விடயம்பற்றி மனக்கவலை தெரிவித்தது பாலைவனத்தில் பசுஞ்சோலை போன்றது.

அதற்கு முழு மாறாக ஹட்டனில் நடந்தபொலிஸ் நாடகம் பொதுவாக வடபகுதி மக்களில் இருக்கும் துவேஷத்தையும் ஆத்திரத்தையும் புலப்படுத்துகிறது.

இதொரு தனிப்பட்ட சில்லறைச் சம்பவம் என்று எவரும் தட்டிக்கழிக்க இயலாது.

தமிழர் விடுதலைக்கூட்டணியுடன் அரசு பேச்சுவார்த்தை நடத்தும் போதும், இருபகுதியினரும் இவ்விடயத்தில் சாவதானமாகவே இருக்கவேண்டும் என்பது தெரிந்ததே.

எங்கும் என்னவும் நடக்கலாமென்ற உணர்வுடன் விவேகமாக நடப்பது அவசியமாகும்.

கலவரம் நடத்த ஆயத்தமாகவிருப்பவர்களுக்கு வசதியளிப்பவர்கள் அக்கலவரத்துக்கு அரைப்பங்கு பொறுப்பானவர்.

இந்தவகையில் இரவு நேரத்தில் தக்க பாதுகாப்பின்றி மாணவர்கூட்டம் மலையேற முயன்றதும், அங்கு ஏற்பட்ட தாக்குதலில் எவ்விதஅபயம் அளிக்க எவரும் மறுத்ததும் மிகமிக துரதிஷ்டமான சம்பவங்கள் ஹட்டனில் நடைபெற்ற பொலிஸ் பரிசோதனை பயங்கரவாதச் சட்டத்தைக்கொண்டு என்னென்ன கேலி அல்லது கோர நாடகங்கள் நடைபெறமுடியுமென்பதை தெளிவுபடுத்துகின்றது.

'புலி' தேடும் வேட்டையில் ஒரு மிருகத்தையாவது நாம் காணமுடியாதநிலையில் இர்த அப்பாவி மாணவரை சீர்கெடுக்கும் அநாகரிகக்கூட்டம் இந்தக் குழப்பநிலைக்கு தூபமிடுகிறது.

### அன்பளிப்பு

(சுருவில்)

சுருவில் றே. க. த, பாடசாலைக்கு சுருவிலைச் சேர்ந்தவரும் தற்பொழுது சாம்பியாவில் தொழில்புரிபவருமான திரு. விக்ரர் நிக்கலாஸ் இரும்புக் கேற் அன்பளிப்புச் செய்துள்ளார்.

இவ்வன்பளிப்பு உறவினர்களால் அதிபர் திரு. வை. தியாகராசா அவிர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ)

### இன்று

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு புனித அந்தோனியார் பாடசாலையில் வண. அ. ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் தீவுப் பகுதி தெற்கு முன்னள் உதவி அதிபர் திரு அ. குணநாயகத்துக்குப் பாராட்டும் இந்நாள் உதவி அரசாங்க அதிபர் ஏ. சி. நாகராசாவுக்கு வரவேற்பும் இன்று நடைபெறவிருக்கின்றது.

### நாளை சுவாமிகள் குருபூசை

## யோகசுவாமிகள் வாழ்க்கையில் அடியார் உறவும் அன்பர் வரவும்



சுன்னாகத்தில் ஒரு பிரபல வேளாண் குடும்பத்தில் தோன்றிய செல்லாச்சி அம்மையார் சரியை, கிரியை யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களையும் முறையே பின்பற்றி திருவருள் வழிகாட்டப்பெருவாழ்வுபெற்றிருந்தார். 1614ம் ஆண்டு தொடக்கம் சுவாமிகள் செல்லாச்சியம்மையாரிடம் சென்று வரத்தொடங்கியதாகத் தெரிகிறது. அம்மையார் சமாதியான தினத்தில் (27.1.29) சுவாமிகள் கலைப்புலவர்நவரத்தினம் அவர்களுக்கு அம்மையார் பற்றிச்சில குறிப்புகளைச் சொல்ல அவர் எழுதியுள்ளார்கள். அக்குறிப்புகள் இன்னும் வெளிவரவில்லை. அம்மையார் நினைவு மலரில் இவ் விருவரையும் பக்றிப் பின்வருமாறுஎழுதியுள்ளேன்.

''அம்மையாரின் ஞானவாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட சில பெரியார்களைப் பற்றி இங்கு குறிப்பிடுவது அவசியம். இவர்களுள் மூதலிடம் யோக சுவாமிகளுக்கே உரியது. அம்மையாருக்கும் சுவாமிகளுக்குமிருந்த ஆத்மீகத் தொடர்பை வர்ணிக்க ஒரு சேக்கிழார் வேண்டும். ஒருவர் நினைக்க மற்றவர் செயலாற்றுவார். இருவரையும் ஒருமித்துக் கண்டவர்கள். அக்காட்சியை இலகுவில் மறக்கமாட்டார்கள். காடு செல்லாமல், மலையேறுமல் வீட்டிலிருந்தபடியேயிருந்து பூரண அனுபூதிநிலை கைவரப்பெற்ற அம்மையாரின் சிறப்பை அன்பர்களுக்குச் சுவாமிகள் விதந்தோதுவார். அம்மையாரும் பல சந்நியாசிகளைக் கண்டதாகவும், ஆனால் யோக சுவாமிகளைப் போன்ற ஒரு பூரணத்துறவியைத் தாம் கண்டதில்லையென்றும் பன்முறை கூறியுள்ளார். இருவருக்குமிடையில் நடைபெற்ற அற்புத நிகழ்ச்சிகளைக் காலகதியில் அன்பர்கள் அறிவார்கள்''.

இவ்விரு பெரியார்களையும் பற்றி விரிவான முறையில் 'சிவதொண்டன்' சிறப்பு மலரில் எழுதியிருப்பதால் அவற்றை இங்கு திருப்பிக்கூறவிரும்பவில்லை.

1916 ம்,1917ம் ஆண்டுகள் யாழ்ப்பாணத்தில் பல துறை மறுமலர்ச்சி ஏற்பட்ட காலம் 1916ம் ஆண்டில் இந்து வாலிபர் இயக்கம்(Y.M.H.A) பேரியக்கமாக ஆரம்பிக்கப்பட்டு வாலிபர் மத்தியில் ஒரு பெரும் விருப்பை ஏற்படுத்தியது. அவ்வியக்கத்தில் உழைத்தவர்களுள் முக்கியமானவர்கள் நியாயவாதி எம். எஸ். இளையதம்பி, வழக்கறிஞர் அம்பலவாணர், முதலியார் சு, சிற்றம்பலம், திரு. எம். சபாரத்தினசிங்கி, திரு. வி. முத்துக்குமாரு என்போராவர்.

### பண்டித மயில்வாகனர்

1917ல் பண்டிதர் மயில்வாகனர் (பின்னர் சுவாமி விபுலாநந்தர்) சம்பத்திரிசியார் கல்லூரிக்கு விஞ்ஞான ஆசிரியராக நியமிக்கப்பட்டார். அவர் ஆனைப்பந்தியில் வசித்து வந்தார். அவர் இருந்த வீட்டில் விவேகானந்தசபை ஒன்று நிறுவப்பட்டது. இந்தச் சபையில் முக்கிய அங்கத்தவராய் விளங்கியவர்கள் கலைப் புலவர் க, நவரத்தினம் ஆசிரியர் செ, மயில்வாகனம், ஆசிரியர் தி. முத்துக்குமாரு, பீ. ஏ.திருவை சி. சி. குமாரசாமி திரு. ரி. என். சுப்பையா, புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை முதலியோர் ஆவர். பண்டித மயில்வாகனரின் இக்கால வாழ்க்கையைப்பற்றி புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை பத்திரிகையில் எழுதிய கட்டுரையில் ஒருபகுதி பின்வருமாறு:

''முன்பெல்லாம் அகக்கண்ணால்கண்டு அன்புக்கிழமை பூண்டுள்ள எனக்கு 1917ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பண்டித மயில்வாகனரின் நேர்முகக் காட்சி கிடைத்தது ஆனைப்பந்தியில் அவர்கள் வசித்த வீடு ஒரு பொதியில் (பொது—இல்) போன்று காட்சியளித்தது. பெரிய படிப்பாளிகள். உயர்தரக் கல்வி பயிலும் இளைஞர்கள் பொது நலத் தொண்டர்கள் பலர் அங்கு வருவார்கள். அரிதாசத்

**ச. அம்பிகைபாகன்**

தரிசனம் அளிக்கும் யோக சுவாமிகளும் அங்கே காட்சியளிப்பார்கள். சுவாமிகளின் அருள் நோக்கத்தால் புத்தொளியும் புதுமலர்ச்சியும பெற்றுத் திகழ்ந்தது. சுவாமிகளுக்குப்பண்டிதர் மீது அளவு கடந்த கருணை, உள்ளிருக்கும் ஆன்மாவைக் கண்டு கொண்டார்''

கலைப்புலவர் நவரத்தினம் அவர்கள் தாம் சுவாமிகளை முதன் முதலில் தரிசித்தது பற்றி செல்லாச்சியம்மையார் நினைவு மலரில் பின்வருமாறு எழுதியுள்ளார்;

1917ம் ஆண்டில் முதலியார் சு, திருச்சிற்றம்பலம். திரு. எம். எஸ். இளையதம்பி பிரமமஸ்ரீ இ. கே. சுப்பிரமணிய ஐயர் முதலியோர் அம்மையாரைத் தரிசிப்பதற்கு ஒரு நாள் சென்றனர். அவர்கள் செல்லும் பொழுது மாணவனாகவிருந்து இந்துவாலிபர் சங்க முயற்சிகளில் ஆர்வங்காட்டிய என்னையுந்தங்களுடன் அழைத்துச்சென்றனர்.

அம்மையாரைத் தரிசிக்கக்கூடிய ஒழுங்குகளை அமைத்து எங்களை அழைத்துச் சென்றவர் திரு. எம். சபாரத்தினசிங்கி என்பதை இங்கு நன்றியோடு கூற நான் விரும்புகிறேன்...... நான் சென்றது அம்மையாரைத் தரிசிப்பதற்கே. ஆனால், அம்மையாரின் பக்கத்தில் ஒரு முனிவரைக் கண்டேன். எனனுடன் வந்தவர்களின் கண்களும் கருத்தும் அம்மையாரை நோக்கி நின்றன. எனது பார்வையும் மனமும் ஒரு இருஷி வடிவத்தில் அமர்ந்திருந்தவர்பால் சென்றுகொண்டிருந்தன. காரணம் அவரின் தோற்றமேயன்றி வேறல்ல. அவர் யாரென எனக்கு அப்பொழுது தெரியவில்லை. அறியவுமில்லை. பின்னர் நாங்கள் விடு திரும்பி வரும்பொழுதுதான் அவர் கொழும்புத்துறைச் சாமி என்றழைக்கப்படும் ஸ்ரீ யோக சுவாமிகள் என்று கூறக் கேட்டேன்...... ஆனல் சுவாமி அவர்களின் தோற்றம் என்னைக் கவர்ந்தபடியால், அவரது உருவம் என் மனதில் படிந்துவிட்டது.''

### அணுக்கத் தொண்டர்கள்

மேற்கூறியவற்றுல் இந்து வாலிபர்சங்கம், விவேகானந்த சபை முதலிய தாபனங்களின் முக்கியஸ்தர்களாக விளங்கிய திருவாளர்கள் எம். எஸ். இளையதம்பி, எம். சபாரத்தினசிங்கி, க. நவரத்தினம், பண்டிதர் மயில்வாகனர், திரு. தி முத்துக்குமாரு, திரு. வை. சி. சி, குமாரசாமி, திரு, ரி. என். சுப்பையா முதலியோர் சுவாமிகளை 1917ம் ஆண்டளவில் அறிந்திருந்தனர் என்பது பெறப்படுகின்றது. இவர்களே பிற்காலத்தில் சுவாமிகளின் அணுக்கத் தொடராய் விளங்கியவர்கள். இவர்களுக்குள் எம். சபாரத்தினசிங்கி என்பவரே முதன்முதலில் சுவாமிகளுக்கு முன் கர்ப்பூரம் கொளுத்தி வணங்கியவரென்பர்.

கலைப்புலவர் நவரத்தினம் 1917ம் ஆண்டளவில் சுவாமிகளைக் கண்டபோதிலும், 1 20ம் ஆண்டுவரையில்தான் அவருடன் நெருங்கிய உறவு ஏற்பட்டது. சுவாமிகளும் கலைப்புலவரும் ஐந்தாண்டுகளுக்கு மேல் இணைபிரியாதிருந்தனர். அதிகாலையில் சுவாமிகள் நவரத்தினம் அவர்கள் வீட்டுக்குப் போய் விடுவார்.. பின்னர் அவர் மத்திய கல்லூரிக்குப் போகும் பொழுது உடன் போவார் நவரத்தினம் அவர்கள் கல்லூரிக்குப் போக சுவாமியவாகள பக்கத்தில் திரு. சின்னத்தம்பி அவர்கள் நடாத்திய தேனீர்க்கடையில் இருப்பார். பள்ளிக்கூடம் விட்டு நவரத்தினம் அவர்கள் வீட்டுக்குப்போகும் பொழுது சுவாமிகளும் கூடிப்போவார்கள் பின்னர் சுவாமிகளும் நவரத்தினம் அவர்களும் வேறு சில அன்பர்களும் முற்றவெளிக்குப்போய் அங்கிருந்துசுவாமி விவேகானந்தர், அரவிந்தர் நூல்களை வாசிப்பார்கள். விடுதலை நாட்களில் சுவாமிகளும் நவரத்தினம் அவர்களும் ஊர் ஊராய்த்திரிவார்கள்.

நவரத்தினம் அவர்களுக்கு நெருப்புக்காய்சல் ஏற்பட்ட பொழுது வைத்தியர் முத்துக்குமாரு வைத்தியஞ் செய்ய, அவரைப் பராமரித்தவர்கள் சுவாமிகளும் திரு. செ. மயில்வாகனம் அவர்களே இராமநாதன் கல்லூரியில் ஆசிரியராகவிருந்த காலத்தில் மருதமடத்தில் ஓர் அறையில் வசித்து வந்தார். அவ்விடத்தில் சுவாமிகளை அநேகமாகக் காணலாம்.

### ஆகாயம்தான்கூரை

யாழ்ப்பாணத்தவர் அப்பொழுது நவரத்தினமவர்களும், மயில்வாகனம் அவர்களும்தான் சுவாமிகளின் வாரிசாக வருவார்களெனப் பேசிக்கொண்டனர். அவர்களும் சுவாமிகளை ஓர் ஆச்சிரமம் அமைக்கும்படி கேட்டனர். அதற்குச் சுவாமிகள் 'எனது ஆச்சிரமத்துக்கு நான்கு திக்குகளும் தான் சுவர்கள் ஆகாயந்தான் கூரை'' எனக்கூறு

[7ம் பக்கம் பார்க்க]

## திருநெல்வேலி ஞானப்பிரகாச முனிவர்

இன்று பங்குனி மீ பூச நக்ஷத்திரம். இத்தினம் திருநெல்வேலி ஞானப்பிரகாச முனிவரது குருபூசை தினமாகும் இக்குருபூசை தினத்தை திருநெல்வேலி ஞானப்பிரகாசர் ஞாபகார்த்தசபை பக்திசிரத்தையுடன் விழாவாகக் கொண்டாடி வருகிறது. அத்துடன் முனிவரது வரலாற்றை ஓரளவாவது சைவமக்கள் குறிப்பாக இளஞ்சந்ததியினர் அறிந்து கொள்வது அவசியம்,

ஈழநாட்டில் நல்லூர்க்கோட்டத்தைச் சார்ந்தது. திருநெல்வேலிக கிராமம். இங்குள்ள நல்லூர் திருநெல்வேலி, புத்தூர் போன்ற ஊர்ப்பெயர்கள் தென்னிந்திய நாட்டிலுள்ளன. இவ்வாறே தமிழ்மொழி தமிழர் பரம்பரை, சைவப் பண்பாடு என்பன ஈழத்திலும் தென்னிந்தியாவிலும் தொடர்ந்து நிலவி வருகின்றன.

—சு. காசிநாதன்

★ விமானக் கடத்தல் நாடகத்தில் புதிய திருப்பம்:

# விமானிகளே விமானத்தை கடத்தினர்!

## போலந்தில் சம்பவம்!

லண்டன், ஏப். 2

போலந்திலுள்ள இரண்டு விமானங்களைக் கடத்தி அதில் தங்கள் குடும்பத்துடன் வியன்னு நகருக்கு சென்றுள்ளனர்!

சோவியத்யூனியனில்தயாரிக்கப்பட்ட இரண்டு கிறிய விமானங்களை கடத்திய இவர்கள், வயல்வெளியில் காத்து நின்ற மனைவி, பிள்ளைகளை ஏற்றிக்கொண்டு சென்றதாக கூறப்படுகிறது.

செக்கோஸ்லவாக்கிய ஊடாக, ஒஸ்றியாவின் தலைநகரமான வியன்னுவிற்கு இவ் விமானிகள் சென்றதாக கூறப்ப்டுகுறது.

முதலில் இவ்விரு விமானங்களும் கடத்தப்பட்டுவிட்டதாகசெய்திகள் வந்தபோதும், விமானங்களை, விமானிகளே கடத்திச்சென்றதாக பின்ளர் வந்தசெய்திகள் தெரிவித்தன.

31 வயதான அலெக்சும், 29 வயதான வில்ஸியுமே இந்த விமானங்களை கடத்திச் சென்ற விமானிகளாவர். [க]

## ராஜாஜி விருதுகள்

(சென்னை)

ராஜாஜி ஞாபகார்த்த விருதுகள் டாக்டர் சித்தர் திரு. எஸ். சீனிவாசன் ஆகியோருக்கு வழங்கப்பட்டது!

இவர்களுக்கு தலா 10,000 ரூபாவும் பாராட்டுப்பத்திரமும் வழங்கப்பட்டது. ராஜாஜி நூற்றுண்டு கமிட்டி, இவ்விழாவை ஒழுங்குசெய்திருந்தது.

தமிழ்நாடு ஆளுநர் சாதாக் அலி தலைமையில் நடந்தவிழாவில் குமாரி ரங்கனந்தஜி பரிசில்களை வழங்கினுர். (க)

## மாஸ்கோவில் பாகிஸ்தானிய தினம்!

மாஸ்கோ ஏப் 2

பாகிஸ்தானின் 25வது சுதந்திர பட்ரிக்ஸ் லுமும்பா மக்கள் நட்புறவு பல்கலைக்கழகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

சுதந்திரதினக் கூட்டத்துக்கு முன்னர் சோவியத் யூனியனில் உள்ள பாகிஸ்தானிய மாணவர்களது வாழ்க்கையையும், கல்வியையும் சித்தரிக்கும் புகைப்படக்கண் காட்சியொன்றும் பாரம்பரிய மரவேலை தோல் பொருட்கள், பின்னல் வேலை போன்றவை டங்கிய கிராமியக் கண் காட்சியும் நடைபெற்றது. நட்புறவுப் பல்கலைக் கழகத்தின் பாகிஸ்தானிய மாணவ சங்கத் தலைவர் மொஹம்மத் யான் இக் கண்காட்சியைத் திறந்துவைத்தார். சோவியத்—பாக் கலாசார சங்கத்தின் துணை தலைவரும், பாகிஸ்தான் முன்னுள் தூதுவருமான மிக்ஹெய் தெக்டியர், நட்புறவுப் பல்கலைக் கழகத்தின் துணைத்தலைவரான கலாநிதி விலாடிமிர் சவின் ஆசியோரும் கலந்து கொண்டனர்.

பாகிஸ்தானிய மக்களது சுதந்திரபோராட்டம் பற்றி பேசிய சங்கத்தின் பொதுச் செயலாளர் ஆஃஸசல்கான் பாகிஸ்தானுக்கும் சோவியத் யூனியனுக்குமிடையில் இப்பொழுது வளர்ந்துவரும் நட்புறவுள், கலாசார விஞ்ஞான தொழிக் நுட்ப ஒத்துழைப்புக்களைப் பற்றி விபரமாகக் கூறினுர்.

## பீடி சுற்றும் தொழிலாளருக்கு காசநோய்

சென்னை, ஏப். 2

வடஆற்காட்டில் 'பீடி சுற்றும் தொழிற்சாலை ஊழியர்கள் பலர் காசநோயால் பீடிக்கப்பட்டுள்ளதாக வேலூர் காசநோ மருத்துவநிலையத்தில் தெரிவிக்கப்பட்டது.

வேலூர் காசநோய் மருத்துவநிலையத்தை, தாம்பரம் காசநோய் மருத்துவநிலையம் போல், தரம் உயர்த்தவேண்டும் என்ற கோரிக்கை ஒன்று விடப்ப்பட்டுள்ளது. (க)

வளைகுடா யுத்தம்:

## ஈராக்குக்கு கட்டார் உதவியளிக்கும்!

லண்டன், ஏப். 2

வளைகுடா யுத்தத்தில் காட்டர் நாடு, ஈராக்டை ஆதரிப்பதாக அறிவித்துள்ளது.

காட்டா உயர் நிர்வாகி தொலைபேசி மூலம் ஈராக் அதிபருடன் தொடர்பு கொண்டு, தமது ஆதரவை தெரிவித்துள்ளார். ஈரானுக்கு எதிராக, ஈராக்கிற்கு உதவ விருப்பதாக அவர் கூறினுர்.

இதேசமயம், டாக்காவில் உள்ள ஈரானிய தூதுவர், ஈரான்படைகள் முன்னேறிச் செல்வதாகவும் சில பிரதேசங்கள் மீண்டும், ஈரான் படைகளால் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவித்திருக்கிருர்.

சக்திவாய்ந்த நாடாக ஈரான் விளங்குவதாகவும் அவர் சொன்னுர், (க)

## ஞானப்பிரகாச முனிவர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி ஞானப்பிரகாச முனிவரின் நினைவுக் குருபூஷை திருநெல்வேலி அரசடி அம்மன் கோவிலில் நாளை நடைபெறும் கோவில் முன்றலில் பொதுக்கூட்டமும் நடைபெறும் இதற்கான ஏற்பாடுகளை ஞானப்பிரகாசர் சபை செய்துவருகிறது.

## மலேசியா அரிசி இறக்குமதி

கோலாலம்பூர், ஏப் 2

மலேசியாவில் கடும் வரட்சி காரணமாக தாய்லாந்திருந்து அரிசி இறக்குமதி செய்யப்படும்.

மலேசிய நேசிய நெற்சபை 4 லட்சம் தொன் அரிசியை இறக்குமதி செய்யவிருக்கிறது.

மலேசியாவில் 14 லட்சத்து 20 ஆயிரம் தொன் அரிசி கடந்தவருடம் உற்பத்திசெய்யப்பட்டது அங்கு பாவனைக்கு 17 லட்சத்து 20 ஆயிரம் தொன் அரிசி தேவைப்படுகிறது.

3 லட்சத்து 5 ஆயிரம் தொன் அரிசியை தசய்லாந்திலிருந்து இறக்குமதிசெய்ய ஒப்பந்தம்செய்யப்பட்டுள்ளது. (க)

## திரு. சித்தன் துணைத் தலைவர்

சென்னை, ஏப். 2

தமிழ்நாடு சட்டமன்ற இந்திரா காங்கிரஸ் துணைத் தலைவராக திரு. என். எஸ். சி. சித்தன் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

235 உறுப்பினரைக் கொண்ட தமிழ்நாடு சட்டமன்றத்தில் இந்திராகாங்கிரஸ் 34 உறுப்பினரைக்கொண்ட இரண்டாவது பெரும் எதிர்க்கட்சியாக விளங்குகிறது. (க)

## விவசாய பொருள் கொள்வனவு

புதுடில்லி, ஏப். 2

போலந்து விவசாய பாவனை பொருட்களை பாரதத்திடமிருந்து சொள்வனவுசெய்ய இருக்த்றது. இதேசமயம் பாரதத்திற்கு சரக்கு, யந்திர சாதனங்களை விற்பனைசெய்ய விருக்கிறது. (க)

மின்வரி அறவிட புதிய திட்டம்:

## குறிப்பிட்ட தொகை மாதாமாதம் அறவிடப்படும்

[கொழும்பு]

மின்சாரக்கட்டணங்களை, முன்னர் போல் ஒவ்வொரு மாதமும் அறவிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

சுடந்த சில மாதங்களாக, மின்சாரக்கட்டணம், மூன்று மாதத்திற்கு ஒருதடவையும், நான்கு மாதத்திற்கு ஒரு தடவையும் வசூலிக்கப்படுவதால் பாவனையாளர்கள் பெரும் கஷ்டப்படுவதாக மின்சாரத்துறை அமைச்சுக்கு பல புகார்கள் தெரிவிக்கப் பட்டன. இதனுல் ஒவ்வொரு தடவையும் கூடுதலான பணம் செலுத்த வேண்டியிருப்பதாகவும், புகாரில் தெரிவித்திருந்தனர்.

ஒவ்வொரு மாதமும் ஒரே அளவு குறிப்பிட்ட தொகையை அறவிடக்கூடிய விதத்தில் மின்சாரத்துறை அமைச்சு முடிவு செய்துள்ளது. இத்திட்டம், இன்னும் இருமாதத்திற்கு பின்னர் அமுலுக்கு வரும்.

பல்வேறு பாவனைகளுக்காக மின்சாரத்தைக் கூடியளவு பயன் படுத்தும் செல்வந்தர்களிடம் குறிப்பிட்ட ஒரு தொகையை மேலதிகமாக அறவிடவும் அமைச்சு திட்டமிட்டுள்ளது.

தற்போதுள்ள் திட்டம் 80ம் ஆண்டு இறுதியில் அமுலுக்கு கொண்டுவரப்பட்டது. இத்திட்டத்தின் படி பாவனையாளர்கள் ஆறு மாதங்களுக்கு மேலாகவும் சிலர் எட்டு மாதங்சளுக்கு மேலாகவும், மின்சாரவரியை கட்டாமல் இருந்தார்கள் என்றும் அவர்களுக்கு அதுபற்றி அறிவித்தல்கள் எதுவும் கிடைக்கவில்லை யென்றும் கூறப்படுகிறது.

இத்திட்டம் நீக்கப்பட்டு, மீண்டும் ஒவ்வொரு மாதமும் மின்சாரவரி அறவிடஅமைச்சு தீர்மானித்துள்ளது.

## மீண்டும் பேச்சுவார்த்தை

சென்னை, ஏப். 2

நாகபட்டினத்தில் உள்ள உருக்காலைத் தொழிலாளர் வேலைநிறுத்தம் தொடர்பான சமரச பேச்சுவார்த்தை வெற்றியளிக்கவில்லையென்றும் தொடர்தும் பேச்சுவார்த்தை நடைபெறும் என்றும், தொழிலாளர்துறை அமைச்சர் திரு. ராகவானந்தம் தமிழ்நாடுசட்டப்பேரவையில் தெரிவித்தார்.

## மாநிலங்களுக்கு கூடிய அதிகாரம்

சென்னை, ஏப். 2

மாநிலங்களுக்கு கூடிய அதிகாரம் வழங்கப்படவேண்டும் என்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் தாக்கலான தனிநபர் தீர்மானம் மீது தொடர்ந்து விவாதம் நடைபெற்று வருகிறது. (க)

## பாரதியார் கனவு நனவாகிறது!

### திரைப்படவிழாவில் அமைச்சர்வீரப்பன்

சென்னை, ஏப். 2

இந்தியக் குடியரசின் 32 வது ஆண்டுவிழாவைக் கொண்டாடும் வகையில் சோவியத் கலாச்சாரக் கேந்திரத்தில் நடைபெற்ற கலை மற்றும் திரைப்பட விழாவை தமிழக செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு, ஆர். எம்' வீரப்பன் ஆரம்பித்து வைத்தார்.

சோவியத் யூனியனில் நடைபெற்ற மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சி வெற்றி பெற்றதை வரவேற்றுப்பாடிய முதல் இந்தியக் கவிஞர் பாரதிதாசன் என்றும் உலகெங்கிலுமுள்ள ஒடுக்கப் பட்ட மக்களின் உண்மை உண்மை நண்பனுக, ஆதரவாளனுக சோவியத் யூனியன் விளங்கும் என்ற அவரது வாக்கு மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. என்றும் அமைச்சர் வீரப்பன் கூறினுர்.

''ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாகவும், இனவெறி ஒதுக்கல் கொள்கைகளுக்கு எதிராகவும் உலக அரங்குகளில் சோவியத் யூனியனும் இந்தியாவும் இணைந்து குரல் கொடுப்பது நமக்கு மகிழ்ச்சியளிக்கிறது. அதே நேரத்தில் சோவியத் யூனியன் நமது பொருளாதார வளர்ச்சிக்காக சுயநலமற்ற ஒத்துழைப்பு வழங்கி வருவதையும் நாம் நன்றியுடன் நினைவு கூர்கிரேம். நம்மிரு நாட்டு மக்களிடையே ஆழமாக வேரூன்றியுள்ள நட்புறவை உலகின் எந்த சக்தியாலும் தகர்த்து விட முடியாது'' என்றும் அமைச்சர் வீரப்பன் தெரிவித்தார்,

இவ்விழாவில் கலந்து கொண்ட சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி திரு. எஸ். மோகன் தமது உரையில் சர்வதேசப் பதட்டநிலைகளைத் தணிப்பதில் இந்திய சோவியத் நட்புறவு ஒரு வலிமையான அம்சமாக மாறியுள்ளது. என்று கூறினுர்.

மகாத்மா காந்தியை மேற்கோள் காட்டிப்பேசிய நீதிபதி திரு. மோகன் இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்த ஒரே நாடு சோவியத் நாடுதான் என்று கூறினுர்.

## "பனம்பொருளபிவிருத்திக்கு தெ. ப. கூ. சங்க ஒத்துழைப்புத் தேவை"

### தலைவர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தெங்குபனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் ஒத்துழைப்புடன்தான் உண்மையான பனம் பொருள் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும் என்று பனம்பொருள் அபிவிருதிச்சபைத் தலைவரும் வட மாகாண தெ. ப. கூ. ச. சமாஜசெயலாளருமான திரு. கே. நடராசா, ஊர்காவற்றுறையில் பனம் மதுசாரவடிசாலையை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

இத் தொழிற்சாலை ஒரு லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டது.

திரு. நடராசா மேலும் பேசுகையில்,

''பனையை நம்பிவாழும் மக்களை அபிவிருத்தி செய்வதே பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் நோக்கமாகும். கடந்த காலத்தில் பனம் பொருள் அபிவிருதிச்சபை இதை மறந்து செயற்பட்டு உள்ளது. இலங்கையில் உள்ள பத்துமாவட்டங்களில் வாழுகின்ற மக்களின் பொருளாதாரத்தை உயர்த்தும் வகையில் அபிவிருத்தி வேலைகளைச்செய்ய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக உறுதியளித்துள்ளார்.

பிரதேச அபிவிருத்தி அமைச்சின் செயலாளரும், பனம் பொருள் அபிவிருத்திச்சபையின் முன்னுள் தலைவருமான திரு. என்.பி ஜெகநாதன் இவ் வடிசாலையைக் குத்துவிளக்கு ஏற்றித் திறந்து வைத்துப் பேசுகையில் ''செயற்திறனும் பனம் பொருள் அபிவிருத்தியில் கடந்த காலங்களில் அபிவிருத்தி வேலைகளைச் செய்து அனுபவமுள்ள திரு.நடராசா பனம் பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் பதவிக்கு முற்றிலும் பொருத்தமானவர் என்று பாராட்டினுர்.

யாழ். மாவட்ட கூட்டுறவு ஆக்க (பனம் பொருள்) உதவி ஆணையாளர் திரு.எஸ். வேலாயுதம்பிள்ளை, பனம் பொருள் அபிவிருதிச் சபைப் பணிப்பாளர் திரு. எம்,எஸ். அலெக்சாந்தர், பொதுமுகாமையா

(4ம் பக்கம் பார்க்க)

9-ம், 10-ம் வகுப்பு பருவகாலபரீட்சை:

# இஸ்லாமிய இலக்கிய கேள்விகள் இல்லை!

## முஸ்லிம் மாணவர் அவதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்விவட்டாரப் பாடசாலைகளில் 9ம், 10ம் வகுப்புகளில் கல்விகற்கும் இஸ்லாமிய மாணவர்களுக்கான தமிழ்மொழி வினாத்தாளில் இஸ்லாமியஇலக்கியத்துக்குரியகேள்விகள் இடம்பெறாததால், பரீட்சை எடுத்தமாணவர் மிகுந்த சிரமத்துக்குள்ளாக வேண்டி ஏற்பட்டுள்ளதாம்.

பாடசாலை மாணவர்களுக்கான முதலாம் பருவகாலப் பரீட்சை இப்பொழுது நடைபெற்று வருகிறது. இஸ்லாமிய மாணவர்கள் கல்விகற்கும் 9ம், 10ம் வகுப்புப் பரீட்சைக்கான தமிழ் மொழிவினாத்தாளிலே, அவர்களுக்குரிய சீறாப்புராணம், புதுக்குஸ்ஸாம் இலக்கியப் புத்தகங்களிலிருந்து வினாக்கள் இடம்பெறவில்லை.

கப் பராமாயணம் சம்பந்தப்பட்ட இலக்கியப்புத்தகங்களுக்குப்பதிலாகவே அவை கற்பிக்கப்பட்டுவந்தன.

ஒஸ்மானியாக் கல்லூரியில் கடமையாற்றும் ஆசிரியர் திரு. மௌனகுரு உடனடியாக இஸ்லாமிய இலக்கியப்புத்தகங்களிலிருந்து வினாக்கள் தயாரித்து, அக்கல்லூரியில் மேற் குறிப்பிட்ட பிரச்னையை அந்தப்பாடசாலை மட்டத்தில் தீர்த்துவைத்தாராம்.

கல்வி அமைச்சின் பாடத்திட்டத்துக்கு அமையபரீட்சை வினாக்கள் தயாரிக்கப்படுவது தெரிந்ததே.

சென்ற வருஷம் டிசம்பர் மாத 3ம் தவணைப்பரீட்சை குறித்தும் இஸ்லாமிய கலண்டரை அனுசரிக்காமல் நேரசூசிகை தயாரித்ததால் இஸ்லாமிய பாடசாலைகள் பாதிக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (மா)

# ஸ்ரீ ஜெயவர்த்தனபுராவில் ஏர்பூட்டு விழாவிற்கு ஏற்பாடு

## விவசாயப் போட்டிகள் இடம்பெறும்

(கொழும்பு)

ஏர்பூட்டு வைபவம் இவ்வருடம் கோட்டே ஸ்ரீ ஜெயவர்த்தன புரவில் நடைபெறவிருக்கிறது. விவசாயிகளின் பாரம்பரிய போட்டிகளும் இடம்பெறவிருக்கிறது.

இத்தகவலை விவசாயத்துறை அமைச்சின் செயலாளர் ரஞ்சன் விஜயரத்ன, நேற்று நடந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

அகில இலங்கை ரீதியில் மண்வெட்டியால்கொத்துதல், ஏர்பூட்டி நிலம் உழுதல் ஆகிய போட்டிகள் இடம்பெறும். இப்போட்டிகள் தொகுதி மாவட்டரீதியில் நடைபெற்று இறுதிப்போட்டி கோட்டே ஸ்ரீ ஜெயவர்த்தன புரவில் நடைபெறும்.

ஏர்பூட்டு விழாவில் இடம்பெறும் மாவட்ட ரீதியிலான போட்டி மே மாதம் 31ம்திகதி முடிவடையும். மாவட்ட ரீதியில் வெற்றி பெறும் 72 பேருக்கு தங்கப்பதக்கங்கள் பரிசு வழங்கப்படும். இப்போட்டிகளில் முதலாவது பரிசாக 25,000 ரூபாவும், 2வதுபரிசாக 15,000 ரூபாவும் 3வது பரிசாக 10,000 ரூபாவும் வழங்கப்படும். (௧)

உடுத்துறை கொலை வழக்கு:

# "ஐயோ அடியாதே என இறந்தவர் நிலத்தில் கிடந்து குளறினார்"

## பஸ் கண்டக்டர் சாட்சியம்

(சாவகச்சேரி)

சம்பவதினம் நான் எனது வீட்டிலிருந்தேன். ஐயோ அடியாதே என்ற சத்தம் கேட்டது. சத்தம் எனது வீட்டுப்படலைக்கு முன்பாகவே கேட்டது. நான் உடனே ஓடிச்சென்று பார்த்தபொழுது தவராசதுரைக்கு 1ம் எதிரி கந்தராசசிங்கம் பைப்பால் ஓங்கி அடித்தார்.

உடுத்துறைக் கொலைவழக்கில் சாட்சியமளிக்கையில் பஸ் நடத்துநர் முத்து விசுவலிங்கம் என்பவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இவ்வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கு 81 மார்ச் 19ல் உடுத்துறையைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை தவராசா என்பவரை அவ்வூரைச் சேர்ந்த கந்தராசசிங்கம், நமசிவாயம், கனகரத்தினம், மகேந்திரன் கனகரத்தினம் என்பவர்கள் பைப்பால் அடித்துக் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். ஸ்ரீ சிவாயா ஆஜராகினார்.

முத்து விசுவலிங்கம் மேலும் தொடர்ந்துகுறிப்பிட்டதாவது கந்தராசசிங்கம் அடித்த அடி தவராசதுரையின் வலது பக்கத்துக் காதாவடியிற்பட்டது. காலமானவர் 'ஐயோ அடியாதே' என்று நிலத்தில் விழுந்துகிடந்தபடி குளறியதைக்கண்டேன். நான் கிட்டச்சென்று ஏனப்பா அடிக்கிறீர்கள்? என்று கேட்டேன். அப்பொழுது 1ம் எதிரி அது எங்கள் சொந்தப்பிரச்னை நீர் இதிற் தலையிடவேண்டாம் என்று கூறினார். நான் உங்கள் சொந்தப்பிரச்னைகளை எங்கள் படலையிலேயோ காட்டுகிறது என்று பேசினேன்.

நான் றோட்டுக்கு ஓடிவந்தபொழுது 1ம், 2ம், 3ம், 4ம் எதிரிகளும் வேறுபலரும் நின்றார்கள். அதனால் 5ம் எதிரியை மட்டுக்கட்ட முடியவில்லை. 1ம் எதிரியை எட்டிப்பிடிக்க ஓடினேன். அவர் ஓடிவிட்டார்.

4ம் எதிரி ஒரு யூறியாப்பைக்குள் குழல் பக்கம் மேலே தெரியத்தக்கதாக ஒரு துவக்கு வைத்திருந்தார், நான் கிட்டப்போன பொழுது துவக்கை வெளியேதூக்கினார். நான் பயந்துஓடிவிட்டேன். சற்று நேரத்தில் இவ்வெதிரிகள் மருதங்கேணிப்பக்கமாகப் போனார்கள். நான் அதன்பின் சாவகச்சேரிப் பொலிசில் முறைப்பாடு கொடுக்கச்சென்றேன். நான் போகும் போது தவராசதுரை நல்லாய் நீட்டி நிமிர்ந்துபடுத்திருந்தார். அவர் பேசவில்லை. இரத்த மோடிக் கொண்டிருந்தது. நான் பயத்தினால் கிட்டப்போகவில்லை.

அவரது சொந்தக்காரர்களின் வீடு தெரியாத படியால் இதை நான் அறிவிக்க நினைக்கவில்லை. பின்னர் தவராசதுரை இறந்து விட்டதாக அறிந்தேன். இதுசம்பந்தமாக பொலிசுக்கும் ஒரு வாக்குமூலம் கொடுத்தேன். மரண விசாரணையிலும் ஒரு வாக்குமூலம் கொடுத்தேன்.

எதிர்தரப்புச் சட்டத்தரணி ஆர். ஸ்ரீ சிவாயா சாட்சியைக் குறுக்குவிசாரனை செய்தார்.

சட்: 1ம் எதிரி அடிக்கும் போது 2ம் எதிரி என்ன செய்தார்?—அவர் 1ம் எதிரிக்குப் பக்கத்தில் நின்றார்.

சட்; 3ம் எதிரிஅப்பொழுது எங்கே?— சற்றுத் தூரத்தில் நின்றார்.

சட்: தவராசதுரையை எவ்வளவு காலமாகத் தெரியும்?— 5, 6 மாசமாகத் தெரியும்.

சட்: எதிரிகளை எவ்வளவு காலமாகத் தெரியும்?— 5, 6 வருடமாகத் தெரியும்.

சட்: தவராசதுரை பொலிஸ் உத்தியோகர்த்தர் மரியநாயகத்தின் வீட்டில் களவெடுத்துக் கோட்டில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது உமக்குத் தெரியுமா?— அதைப் பற்றி எனக்குத் தெரியாது.

சட்: அவர் இறந்த பின்பாவது அறியவில்லையா?— இல்லை.

சட்: நீர் 1ம் எதிரி அடித்ததைக் கண்டீர்?— ஆம்.

சட்: 2ம், 3ம், 4ம், 5ம் எதிரிகள் ஏதாவது செய்தார்களா?— அவர்கள் எதுவும்

(5ம் பக்கம் பார்க்க)

# "பேரிழப்புக்களை நினைவுகூர பொதுவான தேசியதினம் ஒன்றை வகுக்க வேண்டும்"

## நேசையா ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

"இந்நாட்டில் வாழும்தமிழ் மக்கள் ஏழுதடவைகள் இன்னல்களுக்குட் பட்டுள்ளார்கள். தமிழாராய்ச்சி மகாநாட்டில் உயிர் நீத்தவர்களுக்காக ஜனவரி 10ம் திகதியைத் துக்கதினமாகஅனுஷ்டித்து வருகிறோம்: தமிழ் மக்களுக்கேற்பட்ட பேரிழப்புக்களை நினைவு கூருவதற்காக பொதுவான தேசிய தினம் ஒன்றை நாங்கள்வகுத்துக்கொள்ளவேண்டும்" என்று தந்தை செல்வா அறங்காவல் குழுத்தலைவர் திரு. கு. நேசையா தந்தை செல்வா நினைவாலயத்தில் நடைபெற்ற நினைவஞ்சலிக் கூட்டத்துக்குத் தலைமை வகுத்துப்பேசுகையில் வேண்டுகோள் விடுத்தார்.

இந்த நினைவாஞ்சலிக் கூட்டத்தை அறவழிப் போராட்டக்குழுவும். அறங்காவல்குழுவும் இணைந்து நடாத்தியது.

திரு.நேசையா தொடர்ந்து பேசுபையில் கூறியதாவது:

"தமிழ் மக்களுடைய தேசிய உணர்வை கட்டி எழுப்பியதலைவர்கள் அமரர்கள் தந்தை செல்வநாயகம், கதிரவேலுப்பிள்ளை, வன்னியசிங்கம் ஆகியோரின் நினைவு தினங்களையும் தமிழ் மக்கள் நினைவுகூருவதற்கான பொதுத் தினம் ஒன்றை தலைவர்கள் ஏற்படுத்த வேண்டும.

"லஞ்சம் சீதனம் போன்ற குறைபாடுகள் எமது மத்தியில் இன்னும் நிலவிக் கொண்டே இருக்குறது.

"சமூகக் குறைபாடுகள் அறவே நீக்கப்படவில்லை: இத்தீய செயல்களை இல்லாமல் செய்து மற்றைய சமூகங்களுக்கு தமிழ் சமுதாயம் சிறந்த ஒரு சமுதாயமாக உதாரணத்துடன் விளங்க வேண்டும்.

"எம்மை ஒரு நீதியான சமூகமாக கட்டி எழுப்பினால் தானாகவே உரிமை கிடைத்துவிடும்" (மா)

# "சமயநெறிகளைகடைப்பிடிக்க உரிமை இருக்க வேண்டும்"

(கொழும்பு)

பண்டாரநாயக்கா மண்டபத்தில் கடந்த 3 தினங்களாக நடைபெற்ற கிறிஸ்தவ இஸ்லாமிய மாநாடு நேற்று முடிவடைந்தது.

மாநாட்டின் இறுதியீல் வெளியிடப்பட்ட அறிக்கையில். தங்கள் இரு மதத்தவர்களும் அமைதியான முறையில் தியான முறையில் சமய நெறிகளை கடைப்பிடிக்க உரிமை இருக்க வேண்டும். என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் ஜனாப் எம். எச். முகம்மது இம்மாநாட்டிற்கு தலைமை வகித்தார். கராச்சி முஸ்லிம் நிலையமும் கிறிஸ்தவ திருச்சபையும் இம்மாநாட்டை ஒழுங்கு செய்திருந்தன. (௧)

## பனம்பொருள்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ளர் கலாநிதி எஸ். மோகனதாஸ், யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர் திரு. நடேசு, திரு. எஸ். கந்தசாமி உட்பட வேறுபலரும் பேசினர். (மா)

## யுதாததேயு திருவிழா

(யாழ்ப்பாணம்)

அரியாலைபுனித யுதாததேயு ஆலயத் திருவிழா இம்மாதம் 22ம் தேதி ஆரம்பமாகி 25 ம் தேதிவரை நடைபெறும்.

22ம் தேதி ஆரம்ப வழிபாடும் திருப்பலியும். 23ம் தேதி வழிபாடும் திருப்பலியும் நற்கருணைப்பவனியும் ஆசீர்வாதமும் இடம்பெறும்.

25ம் தேதி காலை திருநாள் கூட்டுப்பலியுடன் திருச்சுரூப சுற்றுப்பிரகாரமும் ஆசீர்வாதமும் நோயாளரை ஆசீர்வதிக்கும் சடங்கும் இரவு நாடகமும் இடம்பெறும். (அ)

## அண்ணாமலை தமிழிசைமன்ற இசைவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அண்ணாமலை இசைத்தமிழ்மன்றத்தின் 24வது ஆண்டுத் தமிழிசை விழா அடுத்தமாதம் 7ம்திகதி ஆரம்பமாக விருக்கிறது நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் 10 தினங்கள் தொடர்ந்து நடைபெறும் இவ்விசைவிழாவில் முன்னணி இசைக்கலைஞர்கள் பலர் பங்குபற்றுவர்.

இம்மாத முற்பகுதியில் இவ்விழா நடைபெறுவதாக முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

'வீடியோ' காட்டியவருக்கு

# 500ரூபா அபராதம் நாடாவும் பறிமுதல்

(மாவிட்டபுரம்)

வீடியோ தொலைக்காட்சியில் சட்டவிரோதமாக படம் காட்டியவருக்கு 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டு வீடியோ நாடாவும் பறிமுதல் செய்யப்பட்டது.

சுன்னாகம் மயிலினி என்னுமிடத்தில் வீடியோ தொலைக்காட்சியில் 'வாழ்வே மாயம்'' என்னும் திரைப்படத்தை சட்டவிரோதமான முறையில் காட்டியதாக செல்லர் சங்கரசிவம் என்பவரை சுன்னாகம் பொலிசார் கைதுசெய்து மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

அச்சமயம் இவர் தம்மீது சுமத்தப்பட்டகுற்றத்தை ஒப்புக்கொண்டார். முன் குற்றம் ஏதாவது உண்டா? என நீதிபதி வினவியசமயம் அவ்வாறு இல்லையென பொலிசார் தெரிவித்தனர்.

இந்நபருக்கு 00 ரூபா அபராதம் விதித்த நீதிபதி திரு. சி. வி. விக்னேஸ்வரன் ''வாழ்வே மாயம்'' திரைப்பட வீடியோ நாடாவையும் பறிமுதல் செய்யுமாறு உத்தரவிட்டார்.

ஏனைய தொலைக்காட்சிகருவிகளை இவரிடம் திருப்பி ஒப்படைக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டார். (௧)

# கொழும்பு - காங்கேசன்துறை மேலதிக ரயில் சேவை

(கொழும்பு)

இம்மாதம் 14ம் திகதி இடம்பெறும் புதுவருட தினத்தையொட்டி கொழும்பு கோட்டையிலிருந்து காங்கேசன்துறைக்கு ஏட்ரல் 6ம்திகதியும், 8ம் திகதியும் மேலதிக ரயில்கள் சேவைக்கு விடப்படுமென்று ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

இவ்விரு நாட்களிலும் இரவு 9.30 மணிக்கு மேல்திக ரயில்கள் கொழும்பு கோட்டையிலிருந்து புறப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (இ)

# 'நல்லைசுவாமிகள் நோக்கம் ஈடேற அவர்வழி செல்வோம்'

## - கலாநிதி ராதாகிருஷ்ணன்

(யாழ்ப்பாணம்)

''நல்லை பரமாசாரிய சுவாமிகள் சைவசமயத்தை வளர்ப்பதற்காக ஓர் ஆதீனத்தையே அமைத்து அரும்பாடுபட்டுள்ளார். அவரது நோக்கம் ஈடேற அவர் காட்டிய வழியைப் பின்பற்றவேண்டும்''

இவ்வாறு தமிழ்நாடு திருச்சிராப்பள்ளி தேசிய கல்லூரியின் தமிழ்த்துறைத்தலைவர் பேராசிரியர் கலாநிதி இரா. இராதாகிருஷ்ணன் வேண்டுகோள் விடுத்தார்.

நல்லைஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் சமாதிநிலை அடைந்த முதலாவது ஆண்டையொட்டி அவரது சமாதியில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. பேராசிரியர் இராதாகிருஷ்ணன் இந்த வைபவத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பேராசிரியர் இராதாகிருஷ்ணன் தொடர்ந்துபேசுகையில், ''ஆறுமுகநாவலருக்குப் பின்பு ஈழநாட்டில் மட்டுமல்ல, இந்தியா, சிங்கப்பூர், மலேசியா போன்ற தமிழ்மக்கள் வாழும் இடங்களிலெல்லாம் தமிழையும் சைவத்தையும் வளர்த்த பெருமை நல்லை ஸ்ரீலஸ்ரீசுவாமிநாததேசிக பரமாச்சாரிய சுவாமிகளையே சேரும்'' என்றார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரியசுவாமிகள் பேசுகையில், 'குருமகாசந்நிதானம் தமிழையும், சைவத்தையும் வளர்க்க எவ்வளவு தூரம் பாடுபட்டாரோ அதே போன்று தாமும் சைவத்தையும் தமிழையும் வளர்க்கப்போவதாகத் தெரிவித்தார்.

போராசிரியை திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் திருமதி வசந்தா வைத்தியநாதன், திருப்பணித் தவமணி எஸ். ரி. தியாகராசா, முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே. ஞானச்சந்திரன், வட பிராந்திய போக்குவரத்துச் சபைத்தலைவர் திரு. எஸ். கனகரத்தினம் உட்பட பலர் ஆசியுரை வழங்கினர்.

நல்லை ஆதீனத் தலைவர் சிவாச்சாரியார் ஸ்கந்த சாம்பசிவக்குருக்கள் தலைமையில் இந்த மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

[சுவாமிகளின் குருபூசை நேற்றுமுன்தினம் நல்லை ஆதீனத்தில் கொண்டாடப்பட்டது.] (மா)

## 407.5!

(கொழும்பு)

மார்ச் மாத வாழ்க்கைச் செலவுப் புள்ளி 407.5 என்று குடிசன புள்ளி விபரவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

## உயர் வகுப்பு மாணவர் மன்றம்

(கரவெட்டி)

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி உயர் வகுப்பு மாணவர் மன்றத்தின் வருடாந்த உண்டாடல் வைபவம் இன்று நடைபெறவுள்ளது. இவ்வைபவத்தில் உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

## உடுத்துறை

(4ம் பக்கத் தொடர்ச்சி)

செய்தது நான் காணவில்லை.

சட்: துவக்கைக் கண்டீரா?—நான் எனது கண்ணுற்கண்டேன்.

சட்: சம்பவ இடத்திற்கும் பொலிஸ் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம்?—தெரியாது.

நீதிபதி: ஓர் பஸ்கண்டக்டராக இருந்து கொண்டு தெரியாதென்கிறீர்?— தூரம் தெரியாது.

நீதிபதி: நீர் எந்தப்பகுதிக்கு கண்டக்டர்?— ஆழியவளை பஸ்ஸில் கடமையாற்றுகிறேன்.

நீதிபதி: தூரம் தெரியாமல் டிக்கட் போடுவது எப்படி?—பிரயாணிகள் சொல்வதைக் குறித்துக் கொடுப்பேன். (கோர்ட்டில் சிரிப்பு)

நீதிபதி; பளையிலிருந்து கொடிகாமம் எவ்வளவு தூரம்?— தெரியாது.

கிளிநொச்சி வங்கிப்பாதுகாப்பு அதிகாரி பொ. கணேசன் சாட்சியமளித்தபின் அடுத்த மாதம் 4ம் திகதிக்கு நீதிபதி வழக்கை ஒத்திவைத்தார் (க)

# யாழ். பல்கலைக்கழக மாணவர் மீது குண்டர்கள் நடத்திய வெறியாட்டம்!

## சிவனொளிபாதமலையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் 23ம் திகதி கல்விச்சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு இலங்கையின் முக்கிய பாகங்களைப் பார்வையிடச் சென்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் சிலர்மீது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சிவனொளிபாத மலைச் சாரலில் வைத்து பலத்த தாக்குதலொன்று இனந் தெரியாத நபர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

''இது ஒரு மிகப் பயங்கர அனுபவம்'' என்று மேற்படி கல்விச் சுற்றுலாவை மேற்கொண்ட மாணவர் கோஷ்டி குறிப்பிட்டது.

கல்விச் சுற்றுலாவில் சிவனொளிபாதமலையைத் தரிசிக்கச்சென்ற இப்பல்கலைக்கழக மாணவர்கள், கடந்த 23ந் திகதி தமது சுற்றுலாவை யாழ்ப்பாணத்திலிருந்து ஆரம்பித்தனர். இவர்கள் இலங்கையின் பிரதான இடங்களைப் பார்வையிடும் வகையில் மார்ச் 23ம் திகதியிலிருந்து 28ந் திகதி வரை இச்சுற்றுலாவை ஒழுங்கு செய்திருந்தனர்.

பயண ஒழுங்கின்படி இம் மாணவர்கோஷ்டி மார்ச் 24ந் திகதி இரவு சிவனொளிபாத மலைக்கு அருகிலுள்ள 'நல்ல தண்ணி' என்ற இடத்தை வந்தடைந்தனர். இவர்களை ஏற்றிவந்த வானை அவ்விடத்தின் ஒரு பகுதியில் நிறுத்த அதன் சாரதி முற்பட்டபோது அங்கு நின்ற பொலிஸ்காரர் ஒருவர் அவரை அணுகி' வண்டியை அவ்விடத்தில் நிறுத்த வேண்டாமென்றும், நிறுத்துவதற்குரிய இடம் சற்றுத் தள்ளியிருப்பதாகவும். உரத்த குரலில் தெரிவித்தாராம். இவ்வேளை அவ்விடத்தில் சிலர் மதுபோதையில் நடப்பனவற்றை அவதானித்துக்கொண்டிருந்தனராம்.

நேரம் இரவு 10 30 மணியாக இருந்தது. சுற்றுலாவில் வந்த சுமார் 25 மாணவிகளும் 15 மாணவர்களும் கூடவந்த விரிவுரையாளர்களுடன் மலையின் மீது ஏற ஆயத்தமானார்கள். இம்மாணவர் கோஷ்டியினர் பத்துப், பத்துப்பேராக பிரிந்து மலையேற ஆரம்பித்தனர்.

அவ்வேளை தாம் முன்பு மதுபோதையில் நிற்கக் கண்ட சிலர் வேறும் தமது சகாக்களுடன் மாணவிகள் மீது உராய்ந்து கொண்டு முன்னே நடந்து சென்றனராம். இது குறித்து மாணவர்கள் சற்றுப் பதட்டமடைந்தனராயினும், இதனைப் பொருட்படுத்தாது தொடர்ந்தும் நடந்துகொண்டிருந்தனர்.

மாணவியரை உராய்ந்து கொண்டு முன்னேசென்ற குண்டர்கள் இவர்கள் போய்க்கொண்டிருந்த பாதை மூன்றுகப் பிரியுமிடமொன்றில் போய்க் குந்தியிருந்தனராம்.

குண்டர்களை அவதானித்த மாணவர் சற்றுத் தூரத்திலேயே இரு பிரிவாகப் பிரிந்து வெவ்வேறு திசைகளில்சென்று கொண்டிருந்தனர்.

இம்மாணவர்களுக்குப் பின்னல் வந்துகொண்டிருந்த இக்கோஷ்டியின் வேறொரு மாணவர் பிரிவு பாதை மூன்றுகப் பிரியுமிடத்தையடையவே அங்கே குந்திக்கொண்டிருந்த குண்டர்கள் இப்பிரிவினர் மீது தாக்கத் தொடங்கினராம். இத்தாக்குதலுக்கு ஈடுசொடுக்கமுடியாத மாணவர்கள் செய்வதறியாது கூச்சலிட்டு அபயக் குரலெழுப்பினராம்.

இவர்களின் அபயக் குரலைக் கேட்டு முன்னே சென்றமாணவர்கள் உதவிக்கு ஓடிவரவே அவர்கள்மீதும் மிருகத்தனமான முறையில் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாம். தாக்குதலை நடாத்தியோர் ''யாழ்ப்பாணப் புலிகளே பறத் தமிழர்களே'' சிவனொளிபாதமலையில் உங்களுக்கென்ன வேலை? என ஆக்ரோஷத்துடன் முழங்கினராம். அத்துடன் தடிகளையும், கற்களையும் பாவித்துத் தாக்குதலில் ஈடுபட்டனராம்.

இத்தாக்குதலில் எவருக்கும் படுகாயமேற்படவில்லையாயினும், உதவி விரிவுரையாளர் ஒருவர் தமது கைக்கடிகாரத்தைப் பறிகொடுத்தார்.

தாக்குதலுக்குள்ளானோர் அருகிலிருந்த பௌத்த ஆலயமொன்றினுள் புகலிடம்தேடிச் சென்று அங்கிருந்த பௌத்த பிக்கு ஒருவரிடம் தமக்கு நேர்ந்தவற்றை விளக்கினர். இதற்கு அப்பிக்கு 'இவ்விவகாரத்தில் நான் தலையிட விரும்பவில்லை.' எனக் கூறிப் பதிலளித்தாராம்.

இவ்வேளை குண்டர்களும் அவ்விடத்திலின்றும் அகன்று, நிலைமை ஓரளவு தணிந்தபின்னர் இம்மாணவர் கோஷ்டி 'தமது சிவனொளிபாதமலை யாத்திரைக்கு' இத்துடன் முற்றும்புள்ளிவைத்து விரைவாக யாத்திரையை ஆரம்பித்த இடத்துக்குத் திரும்பினர்.

இவர்கள் திருமபிகொண்டிருந்தவேளை, யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இன்னுமொருகோஷ்டி சிவனொளிபாத மலையில் ஏறிக்கொண்டிருந்தனர்.

திரும்பிக் கொண்டிருந்தவர்கள் அவர்களைக் கண்டதும் பெரும் ஆறுதல் அடைந்தவர்களாக தமக்கு ஏற்பட்ட விபரீத அனுபவத்தை அவர்களிடம் தெரிவித்தனர்.

பின்னர் இவ்விரு கோஷ்டியினரும் தமது யாத்திரையை அத்துடன் நிறுத்தி தாம் வந்த வண்டிகளிலேயே அவ்விடத்தினின்றும் அகன்றனர்.

மறுநாள் காலை 9 மணியளவில் தாக்குதலுக்குள்ளான மாணவர் கோஷ்டி நோர்வூட் பொலிஸ் நிலையத்தில் தனது முறைப்பாட்டைச் செய்து கொண்டது.

முறைப்பாட்டை செவிமடுத்த நோர்வூட் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனக்கு அளித்த முறைப்பாட்டைசம்பவம்இடம்பெற்ற 'நல்ல தண்ணி' பொலிஸ் நிலையத்தில் செய்துகொள்ளும் படி கூறினாராம்.

மாணவர் கோஷ்டிக்கு பொறுப்பாகவிருந்த விரிவுரையாளரொருவர் இதற்கு மறுத்து தாம் அங்கே திரும்பப் போகவிரும்பாததற்கான காரணங்களை விளக்கினாராம். இவற்றை அனுதாபத்துடன் கேட்டுக்கொண்ட அவ்வதிகாரி தாம் 'நல்ல தண்ணி' பொலிஸாருடன் தொடர்பு கொண்டுஉரிய நடவடிக்கைகளை எடுக்கஉத்தரவிடுவதாக உறுதியளித்தாராம்.

இவ்வதிகாரி இத்தாக்குதல் பற்றித் தமது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கையில், 'நான் ஒரு சிங்களவன் என்ற முறையில் உங்களுக்கேற்பட்ட நிலையையிட்டு வருத்தமடைகிறேன்.

இன்றும் ஆயிரக்கணக்கான பௌத்தர்கள் எவ்வித இடையூறுமின்றி யாழ். குடாநாட்டிலுள்ள 'நாகதீப விகாரைக்குச் சென்று வருகின்றார்கள். அவர்கள்மீது இத்தகைய காடைத்தனம் மேற்கொள்ளப்பட்டதாக நான் அறியவில்லை'' என்றாராம்.

மேலும் அவ்வதிகாரி தமக்கு பல தொலைபேசி அழைப்புகள் சிவனொளிபாதமலைப் பகுதியில் வடபகுதியிலிருந்து சில புதியவர்கள் வந்திருப்பதாகவும் அவர்கள்மீது நோட்டம் விடும்படியும் தாம் கேட்டதாவும் குறிப்பிட்டார்.

'இவ்வாறு சிவனொளி பாதமலை யாத்திரை' நாடகம் நடந்து கொண்டிருந்தபோது 55 மாணவர்களையும், 3 விரிவுரையாளர்களையும் கொண்ட இன்னுமொரு யாழ். பல்கலைக்கழக சுற்றுலாக்கோஷ்டிக்கு மார்ச் 24ந் திகதியன்றே ஹட்டனில் வேறொரு அனுபவம் கிடைத்தது.

இக்கோஷ்டி மார்ச்24ல் தனது சுற்றுலாவை மேற்கொண்டு ஹட்டன் டொன்பொஸ்கோ பாடசாலையை மாலை மூன்று மணியளவில் வந்தடைந்தது. இக்கோஷ்டி இரவுச் சாப்பாட்டை முடித்த பின்னர் சிவனொளிபாதமலைக்குச் செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்தது.

அவ்வேளை இரவு எட்டுமணியளவில் இனந்தெரியாத இருவர் சாதாரண உடையில் அவ்விடத்துக்கு வந்து பஸ்ஸிலிருந்த மாணவர்களிடம் தம்மைப்பொலிஸாரென அறிமுகப்படுத்தி, 'புலிகளே உங்களுக்கு இங்குவர என்ன துணிச்சல்?' எனக் கேட்டனராம்.

பின்னர் பஸ் சாரதியிடம் பஸ்ஸை ஹட்டன் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டுசெல்ல உத்தரவிட்டனராம்.

பொலிஸ் நிலையத்தில் சகலரது பயணப் பைகளும் சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் வரை சோதனையிடப்பட்டனவாம்.

ஹட்டன் பொலிஸ் அதிகாரி மாணவரிடம் ''யாழ்ப்பாணப்புலிகள் ஹட்டனில் திரிவதாக தமக்குத் தொலைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டதென்றும், சிங்களப்பட்டதாரிகளாகயிருந்தால் பிரச்னைகள் இல்லை. என்றதுடன், தற்போதைய நிலைமையில் தாம் யாழ்ப்பாணத்திலிருந்து வரும் எவர் மீதும் ஐயம் கொண்டிருப்பதாகத் தெரிவித்தாராம்.

சோதனைகள்யாவும் முடித்த பின்னர் அக்கோஷ்டியைச்

(7ம் பக்கம் பார்க்க)

# கேள்வி அறிவித்தல் -1982

## குறிகாட்டுவான் - நயினாதீவு பயணப் படகுச் சேவை

யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபையின் உப அலுவலகங்களான புங்குடுதீவு. நயினாதீவு ஆகியவற்றின் பூரண ஆணைக்குட்பட்ட கடற் பிராந்தியத்தில் ஒரு பயணப்படகுச் சேவையை நடாத்துவதற்கு, ஊர்காவற்றுறை தேர்தல் எல்லைக்குள் வதியும் படகுகளைச் சொந்தமாக வைத்திருக்கும் தனி நபர்களிடமிருந்தும் சங்கங்களிடமிருந்தும் படகுகளைக் குத்தகைக்கு எடுத்து வைத்திருப்பவர்களிடமிருந்தும் கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகள் 1982ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ம் திகதி 11.00மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் அன்று பிற்பகல் 3.00 மணிக்கு எனது அலுவலகத்தில் என்னால் திறக்கப்படும்.

கேள்வி வைப்புப்பணமாக ரூபா 300/—ஐயும், கேள்விப் பத்திரப் பெறுமதியாக ரூபா 50/—ஐயும் செலுத்தி, மேற்காட்டப்பட்டுள்ள தகுதிகளை ஆவணங்கள் மூலம் நிரூபித்ததின் பேரில் புங்குடுதீவு, நயினாதீவு உப அலுவலகங்களில் 198 'ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5ம் திகதியிலிருந்து ஏப்ரல் மாதம் 16ம் திகதி நண்பகல் 12.00 மணி வரை கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகள் இணைப் பிரதிகளில் நிரப்பப்பட்டு அரக்கு முத்திரையிடப்பட்ட தபால் உறையில் இடதுபக்க மேல் மூலையில் ''படகுச் சேவைக் கேள்வி 1982'' என்று குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் எனக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

சித்திகரக் கேள்விக் காரர்கள் யாழ். அபிவிருத்திச்சபையினால் நியமிக்கப்பட்ட படகுச்சேவை குழுவினால் தீர்மானிக்கப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும், அவர்களால் தீர்மானிக்கப்படும் கட்டணங்களை அறவிட்டும் ஒரு நாளுக்கு போவதற்குப் 12 சேவைகளும், வருவதற்கு 12 சேவைகளும் குறிகாட்டுவானுக்கும் நயினாதீவுக்குமிடையில் நடாத்துதல் வேண்டும்

இக் கேள்விகளை ஏற்கவோ நிராகரிக்கவோ யாழ். அபிவிருத்திச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு. மேலதிக விபரங்களை புங்குடுதீவு, நயினாதீவு உப அலுவலகங்களில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தேவநேசன் நேசையா.
செயலாளர்,
யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை

யாழ். அபிவிருத்திச்சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
31/3/1982. 2742

ஹரன் யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
புகுந்த வீடு
[புதிய பிரதி]

வெஸ்லி மணிப்பாய்
தினசரி: 2.30 6.15 9.15
ரஜனிகாந்த்—சீமா
காளி

யாழ்.றீகல்
தினசரி 10—30, 2—30, 6—30, 9—30
சில தினங்கள் மட்டும்
தணியாத தாகம்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
அஜாசத்தா
(தமிழ்)
5.ம் திகதி முதல் திருட்டுராமன்

லிடோ தினசரி 4 காட்சிகள்
(யாழ்.நகர்)
இரு தினங்கள் மட்டும்
பூந்தளிர்
5.4.82 முதல்
பச்சைவிளக்கு

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 10.30, 1.30, 4.30, 7.00 9.30
Clint Eastwood, Sandra Look in
Gray Lady Down
(Scope — Color)

மனோகரா (யாழ்ப்பாணம்)
10-30, 2-30, 6-30 9-30
2-4-82—5-4-82 வரை
மாலினி பொன்சேகா நடித்த
ஆராதனு
(சிங்களம் —கலர்)

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்—ஸ்ரீபிரியா நடித்த
பொல்லாதவன்
(ஈஸ்ட்மன் கலர்)

சாந்தி (யாழ்ப்பாணம்) தினசரி 5 காட்சிகள் இன்றுமட்டும்
CHARLES BRONSON
"THE MECHANIC"
Co or — Adults

கடைசி 6 தினங்களாக பறந்து கொண்டிருக்கிறோம்.
ராணி (யாழ்.நகர்)
தினசரி 10.80, 2.30, 6.15 9.30
கமலஹாசன் - ரதி நடித்த
உல்லாசப் பறவைகள்
(ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
பெண்குலத்தின் பெருமையை விளக்கும் அற்புத மான வண்ணச் சித்திரம்—ஒவ்வொரு பெண்ணுக்கும் ஓர் ஒப்பற்ற படிப்பினையாக விளங்கும் உன்னத காவியம்—திடீர்த் தீர்மானத்தினுல் திரைப்பட நட்சத் திரத்திற்கு ஏற்பட்ட விபரீத முடிவைக் காணத் தவருதீர்—
ஸ்ரீபிரியா—கமல்— ரஜனி— நாகேஷ்—
நடிகர் திலகம் சிவாஜி மற்றும் பல
முன்னணி நட்சத்திரங்கள் நடித்த
★நட்சத்திரம்★

# இன்றைய பலன்

பங்குனி மாதம் 21ம் திகதி
சனிக்கிழமை
(3—4—82)

மேடம்: தெளிந்த மனத்துடன் செயலாற்றப் புறப் படுவீர்கள், திரைப்படத் தொழில் சம்பந்தப்பட்டவர் கள் சிறப்படைவர், முயற்சி செய்யில் முன்னேற்றத்திற்கு இடமுண்டு.

இடபம்; உழைப்பினுல் முன்னேற்றத்துக்கு இட முண்டு, வியாபாரத் துறை யில் விருத்தியுண்டு, சகோதர வளிப் பொருளுக்கு இட முண்டு.

மிதுனம்: தானிய நஷ்டத் துக்கு இடமுண்டு, வணிகர் கள் புதிய முதலீட்டைத் தவிர்த்துக் கொள்ளவும், எதி லும் தயக்கம் உண்டு ஆத ரவு கொடுத்தவரே முடிவில் கைகொடுப்பார்.

கடகம்: வாழ்க்கை மேடு பள்ளம் நிறைந்ததாக இருக் கும், உடல் நலத்தைப் பேணிக்கொள்ளவும், அபாய கரமான காரியங்களைத் தவிர்ப்பது விரும்பத்தக்கது.

சிங்கம்: கடமையாற்றும் இடத்தில் சிறப்பான இடம் கிடைக்கும், யுதிய கண்டுபிடி ப்புக்களில் அதிக ஆர்வம் பிறக்கும், டாக்டர் போற்றப் படுவார்கள்.

கன்னி: வாழ்க்கையில் புதியன தென்படும்; எதிலும் தாக்க மனப்பான்மை உருவா கும், கிநேகிதர் வழியால் கவலைகள் தோன்றக்கூடும்.

துலாம்: பொறியியலாள ருக்கு இன்று பொறியியலா ளருக்கு இன்று பொன்னுன தினம், பூமி விவகாரத்தில் இன்று நல்ல முடிவு ஏற்ப டும், சிலருக்கு வேண்டிய பணமும் கிடைக்கும்.

விருச்சிகம்: இதயத்தில் மகிழ்ச்சி வெள்ளம் பொங்கும், இனஞ்சனம் கூடுவர், புத்திர சுகத்துடன் தொழில் துறை யில் வெற்றியுங் கிடைக்கும்.

தனுசு: இயந்திரங்களுடன் பழகுபவர்களுக்கு அவதானம் வேண்டும். நீண்டநாள் உற வில் முறிவு ஏற்படலாம். கடமையாற்றுமிடத்தில் சகாக் களுடன் நிதானமாகப் பழக வும்.

மகரம்: இல்லத்தில் இன்று இனிமையான சம்ப வங்கள் இடம்பெறும். வாக்கு வன்மையின்மூலம் பெரிய மனிதர்களின் ஆதரவு கிடை க்கும்.

கும்பம்: கழுகுப் பார்வை வட்டமிடும், தடைகள் ஏற்ப டும். நண்பர் ஒருவருடன் பகைத்துக்கொள்ள நேரிட லாம்.

மீனம்: தாம்பத்திய வாழ்க் கையில் அதிக ஒற்றுமைக்கு இடமுண்டு, காதலர்களுக்கு இன்பமான சூழ்நிலை தென்ப டும், ஆதரவு கிடைக்கும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## தவக்கால நற்சிந்தனை



இன்றைய சமுதா சமுதாயத்தை நம்ப முடியாது. அது உள் ஒன்று வைத்து புறம் ஒன்று சொல்லும். முன் ஒன்று சொல்வி பின் ஒன்று சொல்லும். இப்போ வாழ்க வாழ்க என வரவேற்கும், சற்றுநேரத்தில் வீழ்க, வீழ்க என விலக்கிவைக்கும். இவன் நல்லவன், இவன் நீதியுள்ள வன் என இப்போ சொன் ஞல், இவன் கெட்டவன். அநீதிக்காரன் சிறிது நேரத் தில் சொல்லும். இவ்வாறு தான் யேசுவையும் ஓசான்ன ஓசான்ன எனப் பாடி வர வேற்ற சமூகம், இப்போ ஒழிந்துபோ, ஒழிந்துபோ என கூக்குரலிட்டு அவரை கொலை செய்யத் திட்டம் தீட்டுகிறது. நீதி புகட்டவந்த நீதிபதிக்கு அநியாயமாய் மரணத் தீர்ப் பளிக்கிறது. படைக்கப்பட்ட வன் படைத்தவனுக்கு தீர்ப் பளிக்கிறுன்.

அருட்செல்வன் ரூபன்.

# "இளைய தலைமுறையினர் பெருமை கொள்ள செய்தல் வேண்டும்"

## இந்து மாநாட்டு கொடித்தினச்செய்தி

(கொழும்பு)

"இளைய தலைமுறையினர் தமதுசமயத்தின் அரும் பெரும் செல்வங்களையும், நீண்ட பாரம் பரியங்களையும், இலட்சி யங்களையும் உணரவும், அவை பற்றிப் பெருமைகொள்ளவும், சமய வாழ்வில் ஆர்வத்தோடு ஈடுபடவும் வழிசெய்தல் வேண்டும்"

அகில உலக இந்துமாநாட் டையொட்டி நடைபெற்ற கொடித்தினம் தொடர்பாக அகில உலக இந்து மாநாட்டு செயலாளரும் பிராந்திய அபி விருத்தி இந்துசமய திணைக் கள பணிப்பாளர் திரு. ஆ. பாஸ்கரதாஸ் வெளியிட்ட செய்தியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்தியில் அவர்மேலும் தெரிவித்திருப்பதாவது: இன் றைய உலகில் ஏற்பட்டுள்ள விஞ்ஞான முன்னேற்றத்தால் எழும் புதிய சந்தர்ப்பங்களை யொட்டி இந்துசமயக் கோட் பாடுகளையும் சொல்முறைகளை யும் ஆராய்ந்து அச்சந்தர்ப் பங்களுக்கு ஈடுகொடுக்கும் விதத்தில்விளக்கம்காணவேண் டும்.

"பிராந்திய அபிவிருத்தி அமைச்சின் இந்து சமயதிணைக் கள உதவிப் பணிப்பாளர் திரு. வி. செ. தங்கவேலு வெளியிட்ட செய்தியில் இலங் கையிலுள்ள இந்து ஆலயங் கள், சிற்பங்கள் ஆகியன பற் றிய விபரங்களை சேகரித்து மகாநாட்டின்போது சமர்ப் பிக்கவிருக்கிறேம்" என்றுர் இலங்கை அறிஞர்களகல் ஆக் கப்பட்ட இந்து சமய நூல்க ளைக் கொண்ட நூற்காட்சி நடாத்தவும் திட்டமிட்டுள்ள தாகவும் அவர் தெரிவித்துள் ளார்.

'கொடிநாள் அமைப்பாளர் திரு. ஆ. கந்தையா வெளி யிட்ட செய்தியில் இந்துசமய அமைப்புக்கள் தமது பங்கை நிறைவேற்றி உதவ வேண்டு மென்றும், சூழ்நிலைக்கேற்பத் தொழில்படவேண்டும் என் றும் தெரிவித்துள்ளார். (க)

## இவர்கள் வெற்றி

(சுருவில்)

சுருவில் றே. க. தமிழ்ப் பாடசாலை விளையாட்டுப் போட்டியில் பழைய மாணவர் களுக்கான நிகழ்ச்சிகளில் வெற்றிபெற்றேர் விபரம் வரு மாறு:

மரதன்: ஜெருட் சுரேஸ், க. சந்திரசேகரம், பூ. யசோத ரன்,

பெண்களுக்கான சைக்கிள் ஓட்டம்: க. யசோதா, சா. கருணு. இ. வசந்தி.

விநோத உடைப் போட்டி: எஸ். கருணு, ந. அருள்மலர், சி. தமிழ்ச்செல்வி.

பெண்களுக்கான பொருள் சேகரித்தல்: திருமதிகள் லீலா வதி பூபாலசிங்கம், இ. சாம்ப சிவம், கமலா ஆனந்தசிலம். (அ)

## சுருவில் றே. க.பாடசாலை விளையாட்டுப் போட்டி

(சுருவில்)

சுருவில் றே. க. பாடசாலை விளையாட்டுப்போட்டி அதிபர் திரு. வை. தியாகராசா தலை மையில் நடைபெற்றது. பிர தமவிருந்தினராக மட்டக் களப்பு அரசாங்க அதிபரும், மட்டக்களப்பு மாவட்டச்செய லாளருமான திரு. எம். அந் தோனிமுத்து கலந்துகொண் டார்.

ஊர்காவற்றுறை உதவி அர சாங்க அதிபர் திரு. சி. பால ரத்தினம், கௌரவவிருந்தின ராகக் கலந்துகொண்டு பேசும் போது ஆரம்பப்பாடசாலையாக விருந்தும் சிறுவர்கள் விளை யாட்டில் போதிய பயிற்சியும், உற்சாகமும் உள்ளவர்களா கக் காணப்படுகிறுர்கள் என் றும் சொன்ஞர்.

விழாவுக்குத் தலைமைதாங் கிய அதிபர் திரு. வை. தியாக ராசா பேசுகையில், மாணவர் களின் எதிர்காலம் ஆரம்பப் பாடசாலையில்தான் அத்திவா ரம் இடப்படுகிறதென்றும், பிள்ளைகளின் எதிர்காலம் பெற்றேர்கையில்தான் தங்கி யுள்ளதால் வேண்டியஉதவி களை அளிப்பது அவர்களது கடமையென்றும் கூறினுர். ஆசிரியர் திரு. பொ. சோமசுந் தரம் பேசும்போது கடமை, கண்ணியம், கட்டுப்பாடுஉள்ள சிறந்த பிரஜையாக விளங்குவ தற்கு விளையாட்டுக்களே வழி காட்டியென்று சொன்ஞர். வண. பிதா பிரான்சிஸ் லோறன்ஸ்அடிகளும் பேசினுர். திருமதி றீ. பிரான்சிஸ் நன்றி தெரிவித்துப்பேசினுர்.

திருமதி றதினு அந்தோனி முத்து பரிசில் வழங்கினுர். திருவள்ளுவர் இல்லம் முதலி டத்தையும், பாரதி இல்லம் இரண்டாம் இடத்தையும் நாவலர் இல்லம் மூன்றும் இடத்தையும் பெற்றன. [அ]

## றேயல் வி. க. சம்பியனுனது

(யாழ்ப்பாணம்)

உரும்பராய் புனித மிக்கேல் சன சமூக நிலையத்தினரால் நடாத்தப்பட்ட 6வது உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டி யின் இறுதிப் போட்டி கடந்த வியாழக்கிழமை உரும்பராய் இந்துக்கல்லூரி மைதானத் தில் நடந்தபோது, உரும்ப ராய் செல்லப்பா விளையாட் டுக் கழகமும் ஊரெழு றேயல் விளையாட்டுக் கழகமும் மோதி ஊரெழு றேயல் விளையாட் டுக்கழகம் 2—0 கோல்களால் வெற்றியீட்டி சம்பியனுனது. பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. எஸ். மரியதாஸ் கலந்து கொண்டார். [கு]

## இன்று மதிய விருந்து

[உடுப்பிட்டி]

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன்கல்லூரி உயர்தர மாண வர்மன்றம் நடாத்தும் வரு டாந்த மதிய போசன விருந் துபசாரம் இன்று சனிக்கிழமை நடைபெறஇருக்கின்றது. இவ் விருந்தில் பிரதமவிருந்தின ராக உடுப்பிட்டித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ரா. இராஜலிங்கம் கலந்து கொள்வார். [அ]

## பதவி உயர்வு

(யாழப்பாணம்)

யாழ். பல்தொழில் நுட்பக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரை யாளரும் வணிக பீடத் தலை வருமாகிய புங்குடுதீவைச் சேர்ந்த வே. இ. பாக்கியநா தன் மேற்படி கல்லூரியின் உப அதிபராக உயர் கல்வி அமைச்சினுல் நியமிக்கப்பட் டுள்ளார்.

இவர் முன்னுள் யாழ். பொது நூலகத்தின் பிரதம நூலகரும் தற்போதய இல ங்கை நூலகச் சங்கத்தின் வட மாநில நூலக பரீட்சகரும் விரிவுரையாளருமாவார்.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நஷனல் வீடியோ (2000 MB மொடல்), 20'' J.V.C. கலர் TV, 30 கசெற் (தமிழ்ப் படங்கள்) விற்பனைக்குண்டு. தொடர்பு: பொ. கா. சிவாஜீ, 52, நாயன்மார் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 2722

பரந்தன் பூநகரி வீதியில் 45 அடி நீளம் 20 அடி அகலமுள்ள பண்டகசாலை பாதுகாப்பான இரும்புக் கேற்றுடன் முக்கால் பரப்புக்காணிக்குள் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: அமிர்தாயன சிவம், பாம்புக்கமம், பரந்தன். 739

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயப் பொங்கற் திருவிழாவில் மில்க்வைற் தயாரிப்புக்கள் யாவும் சகாய விற்பனையுடன் அன்பளிப்புகளும் வழங்கப்படும். மில்க்வைற் தயாரிப்புக்களின் மேலுறைகள் சேகரித்து வைத்திருப்போர் எமது விளம்பர வாகனத்தில் கொடுத்து பெறுமதி வாய்ந்த பரிசுகளைப் பெற்றுக் கொள்ளலாம். மில்க்வைற், யாழ்ப்பாணம். 2698

புனரமைக்கப்பெற்ற ஹொண்டா C 90 மோட்டார் சைக்கிள்களும் L/D 5 வானுக்குரிய என்ஜினும் விற்பனைக்குண்டு, நா. சாம்பசிவம் அன் கோ, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 2715

இறக்குமதி செய்யப்பட்ட குளிர்சாதனப் பெட்டி உடன் விற்பனைக்குண்டு. (வெஸ்ட்டிங் கவுஸ் 12 ச. அடி கொள் அளவு) ஹோட்டல் றிவேக்கா, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2721

## தேவை

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாயிலுள்ள கடைச்சல் பட்டடைக்கு உடன் வேலையாட்கள் தேவை. சம்பளம் மாதாந்த அல்லது நாளாந்த அல்லது ஒப்பந்த அடிப்படையில் விருப்பம்போல் வழங்கப்படும். விண்ணப்பங்கள் 07—4—82 வரை ஏற்றுக் கொள்ளப்படும். விரும்புவோர் பின்வரும் விலாசத்தில் எம்முடன் தொடர்பு கொள்ளவும். வடிவேல் அன் சன்ஸ், 142, ஆஸ்பத்திரிவீதி, நவீன சந்தை, யாழ்ப்பாணம். 2737

## பயிற்சி

3 மாத மோட்டார் மெக்கானிக டிப்பிளோமா பயிற்சி 05—04—82 ஆரம்பமாகின்றது. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னெலொஜி, 9/1, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 2724

ஒரு மாத எலக்றிக்கல் வயரிங்—வெல்டிங் டிப்பிளோமா பயிற்சிகள் 06—04—82 ஆரம்பமாகின்றன. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னெலொஜி, 9/1, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 2725

வெல்டிங், மோட்டார் மெக்கானிசம், வயறிங் (அறிமுறை, செய்முறையுடன்) ஆரம்பம் 03—04—82 P. M. 1—00 மணி J. E. C. 33, பருத்தித்துறை வீதி, றெயில்வே கடவைக்கு அருகில், யாழ்ப்பாணம். 2730

## புதிய அரசாங்க அதிபர்

(கொழும்பு)

டி.எவ்.பாலசந்திரன் இரத்தினபுரி அரசாங்க அதிபராகவும் மாவட்ட அபிவிருத்திச் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. பாலசத்திரா இலங்கை நிர்வாக சேவையின் சிரேஷ்ட அங்கத்தவரென்பது குறிப்பிடத்தக்கது. (கி)

## வெற்றுச் சாக்கு கேள்வி விளம்பரம்

கட்டைவேலி — நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்தில் 6000க்கு மேற்பட்ட சாக்குகள் கேள்வி மூலம் விற்பனைக்கு இருக்கின்றன. ரூபா 25.00 மேற்படி சங்கத்தில் கட்டி கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம். சீல்வைத்த கேள்விப் பத்திரங்கள் யாவும் 10—04—82ந் திகதி சனிக்கிழமைக்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால்மூலம் ''பொது முகாமையாளர், கட்டைவேலி—நெல்லியடி ப. நோ. கூ. சங்கம், கரவெட்டி'' என்னும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். கேள்விப்பத்திரம் அனுப்பும் தபால் உறையின் இடது பக்கமேல் மூலையில் ''வெற்றுச் சாக்குக்கான கேள்வி'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

சோ. இராமலிங்கம்,
பொதுமுகாமையாளர்,
கட்டைவேலி—நெல்லியடி
ப. நோ. கூ. சங்கம்.

கரவெட்டி,
31—03—82. 2726

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

### யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

மரணசாதனமின்றி மரணமெய்திய ஆயர் இல்லம் யாழ்ப்பாணம் அருட்திரு. ஜோண்பிள்ளை ஜோண் சிங்கராயர் அடிகளாரின் மரணச்சொத்து விடயமாக

மரணமெய்தியவர் மரணச்சொத்து)
நியாயாதிக்கம் ) இல. 3638
யோண்பிள்ளை கிரகறி,
சில்லாலை, பண்டத்தரிப்பு
மனுதார்.

மேற்படி நீதிமன்றத்தில் மற்குறித்த இலக்கம் கொண்ட மரணச்சொத்து நிர்வாகத்தத்துவ வழக்கு மேற்குறித்த மரணமெய்தியவரின் சொத்துக்களுக்கு நிர்வாகத் தத்துவம் பெற மேற்குறித்த மனுதாரால் தாக்கல்செய்யப்பட்டு அதற்கான பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1982ம் ஆண்டு சித்திரை மாதம் 28ம் திகதி முற்பகல் 9·00 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் பூரண கட்டளையாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றார்.

1982ம் ஆண்டு 03ம் மாதம் 29 திகதி.

மன்றின் கட்டளைப்படி,
தா. குலஞானம்,
பதிவாளர்

தயாரித்தவர்:
இ. சபேசன்
மனுதாரின் சட்டத்தரணி
2706

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## நல்லூர் ப. நோ. கூ. சங்கம் கேள்வி விண்ணப்பம் உரக்களஞ்சியம் அமைத்தல்

சங்கத்தால் நிர்மாணிக்கப் படவுள்ள உரக்களஞ்சியக் கட்டிடத்திற்காக கூலி ஒப்பந்தகாரரிடம் இருந்து கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விபரங்களுக்கு தலைமைக்காரியாலயத்தில் 15.4.82 அன்றோ அதற்கு முன்போ விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளவும். விண்ணப்ப முடிவு திகதி 17.4.82 ஆகும்.

பொதுமுகாமையாளர்.
2734

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் கூறுவிலை

யாழ்ப்பாண நகரமண்டபத்தை அடுத்துள்ள மின்சாரத் தூண்கள் தயாரிக்கும் இடத்தில் இருந்து, யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற எல்லைகளுக்கு உட்பட்ட வேலைத்தலங்களுக்கு 22/25 அல்லது 28/30 அடி நீளமுள்ள மின்சார தூண்களை சேதம் எதுவுமின்றி ஏற்றி இறக்குவதற்கான கூறுவிலைகள் எதிர்வரும் 16.04.1982 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணி வரை என்னுல் ஏற்றுக்கொள்ளப்படும்.

22/25 அல்லது 28/30 ரக தூணுக்கு இன்ன தொகை கேட்கப்படுகிறது. என்பது தனித்தனியாக கூறுவிலைகளில் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

சி. வி. கே. சிவஞானம்.
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்

மாநகராட்சிமன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணப்.
01.04.1982. 2740

## யோகசுவாமிகள்...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

வாராம். இவர்கள் இருவரும் வேறு வழிகளில் செல்லவேண்டியநியதி இருந்ததுறைற் போலும் அப்போது ஆச்சிரமம் அமையவில்லை. மேற் கூறப்பட்ட இருவரைப்போல் சுவாமிகளை விளங்கியவர்களை காண்பதரிது. நவரத்தினம் அவர்கள் இருந்திருந்தால் அவர்களை சுவாமி விளங்கியவர்களைப்பற்றிச் சிறந்த நூலொன்று எழுதியிருப்பார்.

அவரில்லாமையினுல் எங்கள் மதிப்புக்குரிய மயில்வாகனம் அவர்களை சுவாமிகளைப்பற்றி எழுதும்படி பலமுறை கேட்டேன். அவர்கள் தமது ஞாபகசக்தி குறைந்துவிட்டதாகவும் உடலும் தளர்ச்சியடைந்து விட்டதாகவும் கூறினர்.

சுவாமிகளைப் பற்றி அறிவதற்கு திரு. செ. மயில்வாகனம் அவர்கள் எழுதிய 'இன்பம்' என்னும் சிறுநூலும், அவர்கள் மகாவாக்கியங்களுக்கு எழுதிய விளக்கமும் பேருதவியாயிருக்கும்.

'சிவதொண்டன்' பத்திரிகையில் கலைப்புலவர் நவரத்தினம் அவர்கள் 'அத்வைத வேதாந்தம்' பற்றிச் சுவாமிகளின் கேள்விப்படி சில கட்டுரைகள் எழுதினுர். அக்கட்டுரைகள் 1955ம் ஆண்டில் புத்தகரூபத்தில் 'சிவதொண்டன்' வெளியீடாக வெளியிடப்பட்டன.

### சுவாமிகள்- திருவிளங்கம்

1920ம்ஆண்டில் சுவாமிகளை இன்னுமொரு பெரியார் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அவர்கள் சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம், திருப்புகழ், கந்தரலங்காரம் முதலிய நூல்களுக்கு அரிய உரைகள் எழுதி வெளியிட்ட வழக்கறிஞர் திருவிளங்கமாவார். இவர்கள் 1920ம் ஆண்டில் மானிப்பாய் இந்துக்கல்லூரி முகாமையாராகவிருந்து பண்டிதர் மயில்வாகனரை (சுவாமிவிபுலானந்தர்) அக்கல்லூரிக்கு அதிபராக்கினுர். பண்டிதர் மூலம் சுவாமிகளுடைய தொடர்பு இவர்களுக்கு ஏற்பட்டது, இதுபற்றிப்பண்டிதர் எழுதியுள்ளது பின்வருமாறு: [இதுபிறர் கூற்ருக எழுதியுள்ளபோதிலும் பண்டிதர் எழுதியதாக இதை எனக்குதவிய திரு. பீதாம்பரனுர் கூறியுள்ளார்.] ''திருவிளங்கம் அவர்கள் குமாரக் கடவுளைத் தியானமூர்த்தியாகக் கொண்டு ஞானனுபூதியடைந்த மகான். பெரியார்களைக் காணவேண்டுமென்னும் பெருவிருப்பினையுடைய திருவிளங்கம் அவர்களை ஆசிரியர் மயில்வாகனனுர் யாழ்ப்பாணம், கொழும்புத்துறையிலே பரமயோகீஸ்வரராக வீற்றிருக்கும் யோகசுவாமிகளிடம் அழைத்துச் சென்றுர். இரு பெரியாருக்குமிடையிலும் இவ்வுலக எல்லையைக் கடந்த பேரன்புநிலை பெற்றது.

அன்று முதல் மானிப்பாய்த் தலைமையாசிரியராகிய பண்டித மயில்வாகனரின் விடுதி தேவரூபமாக மாறியது. கொழும்பில்இருந்து திருவிளங்கம் அவர்கள் வருகிற நாளிலே யோகசுவாமிகளும் நவாலியூர் தம்பையா உபாத்தியார் அவர்களும் மயில்வாகனனுர் விடுதிக்குவந்துவிடுவார்கள். இரவு முழுவதும் திருப்புகழ் பாடுகிற இசை கேட்போரைப் பரவசமாக்கிக் குமாரலோகத்துக்குக்கொண்டுசெல்லும் இந்த அனுபவத்தினைப் பூரணமாகப் பெற்ற மயில்வாகனனுரது சிந்தனை மேலும் மேலும் ஆத்மஞான வழியினை நாடிநின்றது.

திருவிளங்கம்அவர்கள் சைவ சாத்திரங்களுக்கு உரையெழுதும்பொழுது சமய விஷயங்களைச் சிந்தித்துச்சிந்தித்து அவற்றில் தெளிவுஏற்பட்டு ஒளிமயமாய் விட்டார் எனச் சுவாமிகள் கூறியுள்ளார். திருவிளங்கம் கொழும்பில் இறந்தவுடன் தன்னையறியாமலே தேய்ந்துவிட்டதாகவும் கூறினர். இவர்கள் இருவருக்குமிடையிலிருந்த ஆத்மீகத் தொடர்பை இதுநன்குவிளக்குகிறது.

சுவாமிகள் வாழ்ந்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் ஒரு தெய்வீகச் சூழல் இருந்தது. அப்படி ஒரு சூழல் மறுபடியும் ஏற்படவேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திப்போமாக.

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் கேள்வி அறிவித்தல்

மாதிரிச் சந்தையின் இரண்டாம் கட்டத்தின் முதலாம் மாடியில் அமைந்துள்ள அறைகளும் கூடங்களும்குத்தகைக்கு கொடுப்பது தொடர்பாக 12.03.82ம் திகதி வெளியான ''ஈழநாடு'' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலைத் தொடர்ந்து.

கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் திகதி 19.04.82 நண்பகல் 12 00 மணி வரைக்கும் நீடிக்கப்பட்டிருக்கிறதென்றும், கேள்விப்பத்திரங்கள் 16.04.82 பிற்பகல் 3.00 மணி வரையும் பெற்றுக்கொள்ளலாமென்றும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

சி. வி. கே. சிவஞானம்.
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற,
அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
31.03.82 2738

## குண்டர்கள்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த விரிவுரையாளரொருவர் அப்பொறுப்பதிகாரியிடம் தாம் வேறும் சோதனைகளுக்குள்ளாகாத விதத்தில் கடிதமொன்றைக் கேட்டாராம். இதற்கு அவர் ''பயப்பட வேண்டாம். ஹட்டன் பொலிசார் எம்மைச்சோதனையிட்டதாகச்சொல்லவும் நான் சகல நிலையங்களுக்கும் இதுபற்றி அறிவிப்பேன்'' எனத் தெரிவித்தாராம்.

இவ் அனுபவத்தைப் பெற்ற மேற்படி பல்கலைக் கழக மாணவர்கள். எதுவுமே புரியாதவராய் குழப்பமடைந்த நிலையில், சிவனொளி பாதமலைக்குத்தாம் செல்லவிருந்த திட்டத்தை ரத்துச் செய்து அங்கிருந்து நேரடியாகக் கண்டிக்குத் திரும்பினுர்களாம்.

ஆதாரம்: சட்டர்டே றிவியூ

## விற்பனையாகின்றது

ஆகஸ்ட் மாதம் நடைபெறவிருக்கும் 5ம் வகுப்பு புலமைப் பரிசிற் பரீட்சைக்கான பயிற்சிகள்.

| | | |
|---|---|---|
| தமிழ் மொழி | — | 7.50 |
| கணிதப்பயிற்சி | — | 7.50 |
| பொதுஉளச்சார்பு | — | 15.00 |

வெளியீடு:
ஞானசுரபி புத்தகக் கம்பனி
217, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 2733

## தேங்காய் விற்பனை

மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைக்கு சொந்தமான கண்டி வீதி பளை 173ம் மைல் கல்லுக்கு அருகாமையில் உள்ள தர்மக்கேணி கரந்தாய் தோட்டத்தில் சுமார் 6,000 தேங்காய்கள் விற்பனைக்குண்டு. மேற்படி தேங்காய்களை தோட்ட அத்தியட்சகரின் அனுமதியுடன் எல்லா வேலைநாட்களிலும் பார்வையிடலாம். தங்கள் கேள்வி விண்ணப்பங்களை கீழ் காணும் விலாசத்திற்கு 1000 தேங்காய்கள் கழிவில்லாமல் என்ன விலை என்பதை தெரியப்படுத்தி உடன் அனுப்பிவைக்கவும். கேள்வி விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் பட்சத்தில் தேங்காய்க்கான முழுத் தொகையையும் மேற்படி தேங்காய்களை அப்புறப்படுத்து முன் செலுத்தப்படல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி 15—04—82.
விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:

முகாமையாளர்
மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபை,
பிராந்திய அலுவலகம்,
165, புத்தளம் றோட், சிலாபம்.
2732

## காங்கேசன்துறையில்
# ரூ38,000கொள்ளை

(மாவிட்டபுரம்)

வீட்டுக்கார வயோதிபப் பெண்ணைக் கட்டிவைத்து 38,300ரூபா பெறுமதியான நகை, பணம் என்பவற்றைக் கொள்ளையடித்த சம்பவம் காங்கேசன்துறையில் நிகழ்ந்துள்ளது.

காங்கேசன்துறை குருவீதியிலுள்ள க. இராசநாயகம்என்பவரது வீட்டிலேயே இக் கொள்ளை இடம்பெற்றுள்ளது.

வயோதிப தம்பதிகள் வீட்டில் நித்திரையிலிருந்த சமயம் யன்னல் கதவை உடைத்துஉட் புகுந்த இரு நபர்கள் கத்தியை காட்டிப்பயமுறுத்தி வீட்டுக்காரப்பெண்மணியின்கைகளைக் கட்டிய பின்னர் வீட்டிலிருந்த நகைகளை கொள்ளையடித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

தாலிக்கொடி, சங்கிலி, தோடு ஆகிய நகைகளும் 600 ரூபாபணமும் கொள்ளையடிக்கப்பட்டதாகவும் அவற்றின் மொத்தப் பெறுமதி 38,300 ரூபா என்றும் பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

காங்கேசன்துறை பொலிசில் புகார் தெரிவிக்கப்பட்டதையடுத்து பொலிசார் புலன் விசாரணையில் இறங்கியுள்ளனர்.

## தனிமனிதனுக செயல்பட்டவர்: 'ஈழகேசரி' பொன்னையாவுக்கு அஞ்சலி

(மாவிட்டபுரம்)

''பத்திரிகையாளர்கள் இன்று பல கஷ்டங்களை அனுபவித்து வரும் நிலையில் 'ஈழகேசரி' பொன்னையா காலத்தில் எத்தனை கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கும் என்பதை இப்பொழுது நினைத்துப்பார்க்க முடிகிறது. அப்படியிருந்த போதும் பத்திரிகையாளனுக்குரிய உறுதியுடனும், மனோபலத்துடனும் தனிமனிதனுக நின்று பணியாற்றிய அவரை நாம் ஒருபோதும் மறக்க முடியாது.''

இவ்வாறு குரும்பசிட்டி சன்மார்க்க சபை மண்டபத்தில் நடைபெற்றஅமரர்'ஈழகேசரி' பொன்னையா நினைவு விழாவில் பிரதம அதிதியாக கலந்துரையாற்றிய யாழ். அரச அதிபர் திரு. தேவநேசன் நேசையா கூறினுர்.

சபைத்தலைவர் கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் அமரர் பொன்னையாவின் உருவப்படத்திற்கு மாலை அணிந்த பின் தொடர்ந்து உரையாற்றிய யாழ். அரச அதிபர் கூறியதாவது:

''அறிவுத்திறனை ஊக்குவிக்கும் பெரும் சாதனங்களாக பத்திரிகைகள் விளங்குகின்றன. பத்திரிகைகள் மூலமாக சமூகத்திற்கு ஆற்றக்கூடிய தொண்டானது மிகவும் தலைசிறந்தது. அதனை சிறப்பாக ஆற்றி தமிழ் மக்களுக்கு பேருதவி செய்தவர் அமரர் பொன்னையா புதிய சிந்தனைகள் சமுதாய முன்னேற்றத்திற்கு வழிகோலுமென்பதை உணர்ந்து புதிய கோணங்களில் சிந்தித்து அவற்றை பத்திரிகை வாயிலாக மக்களிடையே பரப்பிய அவர் சிந்தனை வளம் மிக்க சமுதாயத்தை கட்டி வளர்த்தார் என்று கூறினுல் மிகையாகாது''.

திருமதி மனோன்மணி சண்முகதாஸ் பேசுகையில் கூறியதாவது: ''பத்திரிகையாளருக்கும்மக்களுக்குமுடையேநெருங்கிய தொடர்பு இருக்க வேண்டும் என்பதை செயலில் காட்டியவர் அமரர் பொன்னையா. பத்திரிகையை ஓர் கருவியாகக் கொண்டு சமூகப் பணிகளில் ஈடுபட்டு மக்களிடையே நன்மதிப்பைப்பெற்றவர் அவர். இன்றைய பத்திரிகைகளுக்கு அவர் ஓர் முன்னேடியாக இருந்தார் என்ருல் மிகையாகாது. அவர் பின்பற்றிய பல அம்சங்கள் இன்றைய பத்திரிகைகளால் பின்பற்றப்பட்டு வருகின்றன. பத்திரிகைகள் படித்தவர்களுக்கோ பாமரர்களுக்கோ அன்றி சமூகத்தின் சகல மக்களுக்கும் பயன்படக்கூடியதாக இருக்க வேண்டுமென்பதை வலியுறுத்தியவர் அவர். அதனை அவர் செயலிலும் காட்டினுர்.

''பாரதிநூற்ருண்டு கொண்டாடும் இன்றைய நிலையில் பெண்களைப் பற்றி அதிகம் பேசப்படுகிறது. அமரர் பொன்னையா அன்றே தமது பத்திரிகையில் பெண்களுக்கு அதிக வாய்ப்புக் கொடுத்து அவர்களது ஆக்கங்களை வெளியிட்டதுடன் பெண்கள் குறித்து நல்ல அபிப்பிராயங்கள் வளரக்கூடியதாகவும் பணிகளை ஆற்றினுர். அவர் பணிகளை நாம் என்றும் நினைவு கூருதல் அவசியம்'' என்ருர்.

மாவை ஆலயஆதீனகர்த்தா மகாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக்குருக்கள் ஆசியுரை வழங்கினுர். விழாவின் இறுதியில் ''சங்காரம்'' நாடகமும் இடம்பெற்றது. யாழ். நாடக அரங்கக் கல்லூரி இதனை தயாரித்தளித்தது. இறுதியில் பொதுச்செயலாளர் திரு. த. இராஜரத்தினம் நன்றி கூறினுர்.

## கனடாவிலிருந்து
# சோவியத் ராஜதந்திரியை வெளியேற்ற பணிப்பு!

லண்டன், ஏப். 2

கனடாவிலுள்ள சோவியத் ராஜதந்திரி ஒருவர் தடை செய்யப்பட்ட தொழில் நுட்ப சாதனங்களை கொள்முதல் செய்ய முயன்ற குற்றச்சாட்டின் பேரில் நாட்டைவிட்டு வெளியேறுமாறு பணிக்கப்படவுள்ளார்.

சோவியத் தூதரக வர்த்தக பகுதியைச் சேர்ந்த திரு. மிக்கேல் அறமோ கடந்தமாதம் 9ம்திகதி, தடைசெய்யப்பட்ட தொழில்நுட்ப சாதனங்களை கொள முதல் செய்ய முயன்றதாகக் கூறப்படுகிறது.

ஏற்றுமதிக்குத் தடைசெய்யப்பட்ட பொருட்களை கொள்முதல் செய்யமுயன்ருர் என்ற குற்றச்சாட்டை சோவியத் தூதரகம் மறுத்துள்ளது.

இதேசமயம் அப்பொருட்களை கொள்வனவு செய்ய பெருந்தொகையான பணத்தை வர்த்தகர் ஒருவருக்கு அவர் கொடுத்திருந்தார் என அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# நாதன் மரணம் கொலைஎன்றுதீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான கான்ஸ்டபிள் மகேஸ்வரநாதனின் மரணம் கொலை என பதில் நீதவான் எஸ். அமிர்தலிங்கம் நேற்று முன் தினம் தீர்ப்புவழங்கியுள்ளார்.

கடந்தமாதம் 22ம் திகதி இரவு 7-45 மணியளவில் வடடுக்கோட்டை இந்துக்கல்லூரிக்கு முன்பாக இவர் சுட்டுக் கொல்லப்பட்டது தெரிந்ததே.

ஆனைகோட்டை பொலிஸ் நிலையத்தில் சுடமையாற்றிய மகேஸ்வரநாதன், ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையம் தாக்கப்பட்ட பின்னர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றினுர்.

சம்பவதினமும் பகலில் கடமையாற்றிவிட்டு வீடு செல்லும் வழியிலேயே இவர் துப்பாக்கி இளைஞர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பிரேதபரிசோதனை நடத்திய யாழ். சட்டவைத்திய அதிகாரி எஸ். சரவணபவானந்தன் பிரேதபரிசோதனை அறிக்கை சமர்ப்பித்ததைத் தொடர்ந்து பதில் நீதவான் கொலை எனத் தீர்ப்பு வழங்கினுர். (மா)

# இன்றும் நாளையும் இறுதிப்போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

விளையாட்டமைச்சினுல் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையே. நடைபெற்ற மெய்வல்லுநர், உதைபந்தாட்ட இறுதிப்போட்டிகள் இன்றும் நாளையும் பிற்பகல் யாழ். மாநகரசபைவிளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன.

நாளை நடைபெறும் இறுதி நாள் போட்டிச்கு யாழ். அரசாங்க அதிபரும், யாழ். மாவட்ட செயலாளருமான திரு. தேவநேன்ச நேசையாவும் பாரியாரும் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வர்.

திருமதி அனிட்டாநேசையா வெற்றியீட்டியோருக்குப் பரிசில்கள் வழங்குவார்.

இல்விளையாட்டுகள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளை விளையாட்டு அமைப்புக்குழுவின் தலைவர் உதவி அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரும், செயலாளர் மாநகரசபை உதவிமுதல்வர் திரு. எஸ். எஸ். அலோசியசும் மேற்கொண்டுள்ளனர். (மா)


## ஹோம் பினுன்ஸ் லிமிட்.

ஹோம் பினுன்ஸ் லிமிட்
உங்கள் நம்பிக்கையின் இல்லம்
உங்களுக்கு வழங்கும் புதுவருடப் பரிசு.

### ஒரியன் T. V.
### கறுப்பு-வெள்ளை

32 செ. மீ. மின்சார சப்பிளையிலும்
கார் பற்றறியிலும் இயங்கும்.

சிறந்த ஜப்பானிய தயாரிப்பு

### அறிமுக விலை 2100/-

இவ் அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்
விலை அதிகரிக்கப்படலாம்


# வெளிநாட்டு செய்தித் துணுக்குகள்

## பாரதியார் வாழ்க்கை படமாகும்

சென்னை, ஏப். 2

பாரதியாரின் வாழ்க்கையை சித்தரிக்கும் முழுநீளத்திரைப் படமொன்று தயாரிப்பது பற்றி பாரதியார் நினைவுக்குழு ஆராய்ந்து வருவதாக தமிழ் நாடு செய்தித்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் தெரிவித்தார்.

## இராணுவம் கைப்பற்றியது

லண்டன், ஏப். 2

ஆர்ஜன்டினுவின் இராணுவப்படைகள் போடலனட் தீவுகளை கைப்பற்றியுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

ஆனுலும் இதனை பிரிட்டிஷ் அரசு மறுத்துள்ளது.

## கன்யாகுமரி கலவரம்

புதுடில்லி, ஏப். 2

கன்யாகுமரி மாவட்டத்தில அண்மையில் நிகழ்ந்தவகுப்புக் கலவரங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பிரதமமந்திரியின் தேசிய நிவாரணநிதியிலிருந்து உதவி வழங்கப்படவுள்ளது.

இதனைபிரதமமந்திரிதிருமதி இந்திராகாந்தி தம்மைச்சந்தித்த தமிழ்நாடு இந்திராகாங்கிரஸ் தலைவர் திரு. எம். பி. சுப்பிரமணியத்திடம் தெரிவித்தார்.

## பெரியார் நினைவாக

சென்னை, ஏப். 2

பெரியார் ஈ. வெ,ராமசாமியின் நினைவாக சென்னையில் ஒரு கோடியே 60 லட்சம் ரூபா செலவில் பெரிய மகாநாட்டு அரங்கமொன்றைநிறுவ தமிழ் நாடு அரசு தீர்மானித்துள்ளதாக செய்தித்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் தெரிவித்தார்.

## பங்களாதேஷ் இந்திய உறவு

டாக்கா, ஏப். 2

பங்களாதேஷிலுள்ள இந்தியத் தூதுவர் திரு.முர்ஷ்கன்ட்டுபே அந்நாட்டின்இராணுவச் சட்ட நிர்வாகி லெப்டினன்ட் ஜெனரல் எர்ஷாத்தைச் சந்தித்து 45 நிமிட நேரம் இரு நாட்டு உறவுகள்குறித்து கலந்துரையாடியதாக அறிவிக்கப்பட்டது. (வெ)

## இளைஞரின்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு மூன்று தினங்களுக்கு முன் இறந்திருக்கலாமென நம்பப்படுகிறது.

பிரேதபரிசோதனை நடாத்திய பருத்தித்துறை வைத்திய அதிகாரி மயிலேறும்பெருமாள் பிரேத பரிசோதனையின்பின், இறந்த இளைஞரின் உட் வெளிக்காயங்களோ உள்க்காயங்களோ காணப்படவில்லை என்றும் வயிற்றுக்குள் இருந்த உணவில் நச்சுத்திராவகம் காணப்பட்டதால் மரணம் சம்பவித்திருக்கலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

சாட்சியங்களை அடுத்து, மரணவிசாரணை அதிகாரி தற்கொலைஎனத் தீர்ப்பளித்தார். இறந்தவரின் சடலம் நேற்று வரை அடையாளம் காணப்படாததால் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டது. [மா]

## அரசு-கூட்டணி

(1—ம் பக்கத்தொடர்ச்சி)

ஞர் வேலைவாய்ப்பு அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்ஹ, கலாநிதி நீலன் திருச்செல்வம் ஆகியோர் இடம்பெற்றிருந்தது தெரிந்ததே.

இவர்களில் அமைச்சர்களான திரு. காமினி திஸநாயக்காவும், திரு. லலித் அதுலத்முதலியும் வெளிநாடு சென்றுள்ளதால் இச்சந்திப்பில் அவர்கள் கலந்துகொள்ளவில்லை. பிரதமமந்திரி திரு. ஆர். பிரேமதாசாவுடன் அவரின் செயலாளர்களான திரு. பிரட்மன் வீரக்கோனும், திரு. ஆர். பாஸ்கரலிங்கமும் ஜனுதிபதியின் செயலாளர் திரு. மெனிக்திவெலவும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர். (இ—வெ)

## இந்து மாநாடு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இம்மாதம் 26ம் திகதி முதல் 28ம் திகதிவரை யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு, இங்கு சிறப்பான வரவேற்பு காத்திருக்கிறது. 27, 28ம்திகதிகளில் யாழ். திறந்தவெளி அரங்கில் நடைபெறும் கலாசாரநிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் இப்பிரதிநிதிகள், அதனைத்தொடர்ந்து அளிக்கப்படும்வரவேற்புக் கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுவார்கள்.

நிலைமை இவ்வாறிருக்க, மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு பொதுவரவேற்பு அளிப்பது பற்றி யாழ். மாநகரசபையும் ஆலோசித்து வருகிறது.

இச்சூழ்நிலையில், மாநாட்டில் கலந்துகொண்டுயாழ்ப்பாணம் செல்லவிரும்பும் பிரதிநிதிகள் அனைவரும் எந்தவிதகட்டுப்பாடுமின்றி அனுமதிக்கப்படலாமெனத் தெரியவருகிறது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாடு'' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 803ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் ஏப்பிரல் மீ 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as News Paper. he General P.O. Sri Lanka. Regd. Q. B. 100236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி: 77 07, 889, 8126.